பதவி விலகும் திட்டமில்லை:

பிரதமர் அலுவலகம் விளக்கம்

02 பக்கம்

தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03. இதழ்: 178 சுபகிருது வருடம், மாசி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை (27.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 06, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50

உஷ்...

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு புதிய திகதி 3ஆம் திகதியன்று அறிவிக்கப்படும் என்பது தெரிந்த விடயம்.

ஆனால், தெரியாத விடயமொன்று இருக்கிறது. இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலொன்றுக்குச் செல்ல ஜனாதிபதி ரணில் ஆலோசிக்கிறாராம்.

இது தொடர்பில் சட்ட ஆலோசனைகளை பெற அவர் தயாராகி வருவதாக அரச மேலிடத்து தகவல்கள் சொல்கின்றன.

ஜே.வி.பி. போராட்டம் அடித்துக் கலைப்பு!

கொழும்பில் நேற்று பேரணியை முடக்கிய பொலிஸ்

•நா.தீனுஷா

தேர்தலை காலந்தாழ்த்துவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் சூழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று (26) கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு, விகாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பமான இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், லிப்டன் சுற்றுவட்டாரத்தினூடாக புறக்கோட்டையை நோக்கி பயணித்திருந்ததுடன்... 02 பக்கம்

படப்பிடிப்பு : கிறிஷான் காரியவசம்

மக்கள் எழுச்சியை தடுக்கவில்லை!

சவேந்திர சில்வா மீது விசாரணைக்குழு குற்றச்சாட்டு

கடந்த ஆண்டு மார்ச் 31 மற்றும் மே 9 மக்கள் எழுச்சிகளின்போது அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் நடத்தை குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் போன்ற விடேட விசாரணைப் பிரிவினால் மேலும் விசாரிக்கப்பட வேண்டுமென இந்த காலகட்டத்தில் ஆயுதப்படைகள் மற்றும் அரச புலனாய்வு சேவைகளின் குறைபாடுகளை ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அட்மிரல் ஒவ் த ப்ளீட் வசந்த கரன்னாகொட, மார்ஷல் ஒவ் த எயார்... 02 பக்கம்

நாட்டை முன்னேற்ற வருவோருக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவேன்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

"கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறியும் அவருக்கு வாக்களித்தார்கள். அவர்கள் கூறும் கதைகளை நம்பி மக்கள் வாக்களித்தார்கள். அதற்கான பிரதிபலனையே தற்போது அனுபவித்து வருகிறோம். சகல செயற்பாடுகளையும் நெருக்கடிக்குள்ளாக்கிவிட்டு, மீண்டும் எனக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமெனில்,... 02 பக்கம்

மருந்துத் தட்டுப்பாட்டால் மோசமான விளைவுகள்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

•கே.சுபானி

நாட்டிலுள்ள அரச வைத்திய சாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்லும் நிலையில், இது தொடர்பில் சுகாதார அமைச்சு ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்காதுள்ளது. இது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர்... 02 பக்கம்

13ஆம் திருத்தத்தை மேலும் பலப்படுத்தத் தேவையில்லை

மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் வேண்டுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் கருதுகிறது. ஆனாலும், அந்தத் திருத்தத்தை பலப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று முன்னாள் பிரதமரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான... 02 பக்கம்

தேர்தலைத் தீர்மானிக்க ரணிலுக்கு அதிகாரமில்லை!

சந்திம வீரக்கொடி காரசாரம்

•கே.சுபானி

தேர்தலை தீர்மானிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு இல்லை - என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்களை நடத்தும் திகதி, தேர்தலை எவ்வாறு நடத்துவது, எந்தத் தேர்தலை நடத்துவதென்பது குறித்தான தீர்மானங்களை... 02 பக்கம்

கடன் விவகாரத்தில் தேவை ஒழுங்கான நடைமுறைகள்

சர்வதேச நாணய நிதியம்

இலங்கையின் கடன் விவகாரத்துக்கு சரியான நேரத்திலான ஒழுங்கான நடைமுறைகள் அவசியம் என சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜி20 அமைப்பின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு பொது கட்டமைப்பின் கீழ் சரியான நேரத்தில் ஒழுங்கான நடைமுறைகள் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி அனுமதி வழங்கக் கூடாது!

வழங்கினால் போராட்டம் என்று வடபகுதி மீனவர்கள் அறிவிப்பு

02 பக்கம்

கமென்ட் கந்தரீ...

ஒத்திவைப்போர் சங்கம் எண்ட ஒன்றை அமைச்சால், அதில ரணில் ஐயாவை தலைவரா போடலாம் என்டு ஒருத்தன் சொல்லுறான்...

இமாலய நில நடுக்கத்தை கொழும்பில் உணர முடியும்

பேராசிரியர் அத்துல தகவல்

இந்தியாவின் வடக்கில் இமாலய பிரதேசத்தில் நில நடுக்கம் ஏற்படக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அப்பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டால் அதன் தாக்கத்தை கொழும்பிலும் உணரக்கூடியதாக இருக்கும். எனவே, நில அதிர்வுகள் உணரப்பட்டால் உயர் கட்டடங்களில் இருப்பவர்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் - என்று சிரேஷ்ட புவியியல் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்தார். 02 பக்கம்



சிலாபம் முன்னேஸ்வரம் வடிவாம்பிகா சமேத முன்னைநாத பெருமான் ஆலய மாசிமக துஜாரோகண(கொடியேற்றம்) வைபவ நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை(26) இடம்பெற்றன. இதன்போது சுவாமி ஊர்வலம் இடம்பெற்றதுடன் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (உடப்பு செய்தியாளர்)

ஊடகர் தினேஷின் தந்தை காலமானார்

பசறை குருவிக்கலையை பிறப்பிடமாகவும் கொழும்பு 10ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரம் (வயது 64) 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் சுயாதீன தொலைக்காட்சி வசந்தம் டிவியில் பணியாற்றும் தயாரிப்பாளரும் தொகுப்பாளரும் அறிவிப்பாளருமான தினேஷின் தந்தையாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பொரளை கனத்தை மயானத்தில் 1ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் தகனம் செய்யப்படும். தொடர்புகளுக்கு - தினேஷ் (மகன்) 071 3241527

பதவி விலகும் திட்டமில்லை:...

"பிரதமர் தினேஷ் குணவர்தன பதவி விலகப்போவதாக பரவிவரும் வதந்திகளில் உண்மையில்லை, அவ்வாறு செய்வதற்கு எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் கோரிக்கையோ அழுத்தமோ இல்லை" என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தினேஷ் குணவர்தனவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கோரியுள்ளதாகவும் சன்ன ஜயசுமன ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

"பிரதமர் பதவியை மாற்றுவதற்கான நகர்வுகள் இருப்பதாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த எங்கள் நண்பர்கள் ஒரு திட்டத்தை முன்வைத்தனர். தினேஷ் குணவர்தனவை அப்பதவியில் இருந்து நீக்கி மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க உத்தேசித்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்" என எம்.பி ஜயசுமன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை பிரதமர் அலுவலகம் மறுத்துள்ளது.

ஜே.வி.பி. போராட்டம்...

ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பேரணிமீது பொலிஸார் தாக்குதல்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் விகாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம், பேரணியாக புறக்கோட்டையை நோக்கி புறப்பட்டது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டப் பேரணியை நிறுத்துமாறு பொலிஸார் கோரியிருந்ததுடன், அநுர எம்.பி உள்ளிட்ட ஆர்ப்பாட்டக் குழுவினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டிருந்தது.

பொலிஸாரின் அறிவிப்பையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையினால், பேரணியை கலைப்பதற்காக நகரமண்டப பகுதி, இப்பன்வல சந்திக்கு அருகில் வைத்து பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பலருக்கு காயம்

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகையினால் உடல் உபாதைகளுக்குள்ளான ஆர்ப்பாட்டக்காரர்கள் 28பேர், சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பில் பிரதான வீதிகள் முடக்கம்

இந்தப் பேரணியின் காரணமாக நேற்று தாமரைத்தடாக திரையரங்கு முதல் நகரமண்டப பகுதி வரையிலான வீதிகள் முழுமையாக மூடப்பட்டிருந்ததுடன், கொழும்பின் பிரதான வீதிகளின் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. சுமார் மூன்று மணிநேரத்துக்கு மேலாக கொழும்பின் பல பாகங்களில் போக்குவரத்து தடையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட பல பிரதேசங்களுக்கு பிரவேசிக்க, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் எட்டு மணி நேர தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு, காலி முகத்திடல் உள்ளிட்ட கொழும்பின் முக்கிய பிரதேசங்களுக்கான பாதுகாப்பு நேற்று பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

இதேவேளை, போராட்டத்தில் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கொள்ளுப்பிட்டி, கொம்பனி தெரு பொலிஸ் பிரிவுகளில் ஒன்று கூடி பேரணியாக பல்வேறு வீதிகளினூடாக ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட வேறுசில கட்டடங்களுக்கு உள்நுழைய திட்டமிட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கமைய, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இதனை தடுத்து நிறுத்துமாறுகோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டப்பேரணி ஆரம்பிப்பதற்கு முன்னரே, பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

அதற்கமைய, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அல்லது பேரணி என்பவற்றை முன்னெடுத்தால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் மக்களுக்கும் இடையில் மோதல் நிலை அல்லது அமைதியின்மை ஏற்பட்டு மக்கள் நெருக்கடிக்குள்ளாகக்கூடும். ஆகவே, பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கிடைக்கப்பெற்றுள்ள தகவலின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட 26 பேர் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்பவர்களுக்கு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்றும், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு, காலிமுகத்திடல் உள்ளிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட சில பிரதேசங்களுக்கு பிரவேசிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. நேற்று ஒரு மணி முதல் பிற்பகல் 8.00 மணிவரை இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டத்தின் முடிவில் உரையாற்றிய அநுரகுமார திசாநாயக்க, ஆட்சியாளர்கள் பேரணியை தடுத்தாலும் தமது கட்சியின் மக்களுக்கான பயணத்தை தடுக்க முடியாது என தெரிவித்தார்.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு...

- யாழ்.நிருபர் -

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி வழங்கும் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடபகுதி கடற்றொழிலாளர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்படுவதாக, வெளியான செய்தி தொடர்பில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று ஞாயிற்றுக் கிழமை வடபகுதி கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில்,

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் கடற்றொழில் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தியும் இதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரியும் நேரில் சந்தித்து பேச வாய்ப்பு தருமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோருவது எனவும், ஜனாதிபதியிடம் இருந்து, கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காது விட்டால் வடபகுதி கடற்றொழிலாளர்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்றில் பேசிய வெளி விவகார அமைச்சர் அலிசப்ரி, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி வழங்கும் முறைமையை பரிசீலிப்பதாக தெரிவித்தமை ஏற்றுக்கொள்ள முடியாது.

புனித ஸ்தலமான கச்சதீவினை கடற்றொழிலாளர்கள் பேச்சுவார்த்தை என்ற பெயரில் பேச்சுக்களை நடத்த அனுமதிக்கக்கூடாது என யாழ். மறை மாவட்ட ஆயரிடம் ஊடகங்கள் வாயிலாக கோருவது போன்ற முடிவுகள் இந்த கலந்துரையாடலில் எட்டப்பட்டுள்ளன.

தேர்தலைத் தீர்மானிக்க...

எடுக்கும் உரிமை, அதிகாரம், அவகாசம் குறித்து அரசியலமைப்பு சட்டத்தின்படி பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

அரசியலமைப்புக்கு முரணாக ஜனாதிபதி முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளையும் உடனடியாக நிறுத்தவேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை தடுத்து நிறுத்துவதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

பாராளுமன்றத்திலுள்ள சகல மக்கள் பிரதிநிதிகளையும் மாற்றவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகவுள்ளது. அதற்காக அரசியலமைப்புக்குட்பட்டு தேர்தலை நடத்த வேண்டிய தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்தால் ஜனாதிபதி பாராளுமன்றத் தேர்தலை நடத்தலாம்.

ஜனநாயக ரீதியில் எந்நேரத்திலும் எதிர்ப்பை தெரிவிக்கவும், வீதிக்கிறங்கி போராட்டங்களை நடத்தவும் முடியும். நாம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டும் ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்ட பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கவில்லை.

ஜனநாயக ரீதியில் எதிர்க்கட்சி இன்னும் முயற்சிக்கவில்லை என மக்கள் எண்ணினால் ஜனநாயகத்துக்கு அப்பால் சென்று தீர்வொன்றை பெற்றுக்கொள்ள அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் - என்றார்.

மருந்துத் தட்டுப்பாட்டால்...

வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று(26) தெரிவித்தார்.

இந்நிலையில் 'எனது தந்தை சிறுநீரக மற்றும் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரை மாதாந்த மருத்துவ கண்காணிப்புக்கு அழைத்து சென்றபோது அவருக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்த மருந்துகள் வைத்தியசாலையில் இல்லை. ஆகையால் அவற்றை தனியார் மருந்தகங்களில் பெற்றுக்கொள்ள பணிக்கப்பட்டோம்.

மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக தனியார் மருந்தகங்களை நாடியபோது மருத்துவர்கள் பரிந்துரைத்த மூன்று மருந்துகளில் ஒன்றையே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எஞ்சிய இரண்டு மருந்துகள் இல்லை. அந்த மருந்துகள் ஒவ்வொன்றும் விலையுயர்ந்தவை.

வைத்தியசாலைகளிலும் மருந்து இல்லை. தனியார் மருந்தகங்களிலும் மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. மருந்து தட்டுப்பாடு, மருந்துப் பொருட்களுக்கான விலையேற்றத்தால் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை வாங்க முடியாத நிலையிலுள்ளதால் என் தந்தையைப் போன்று இன்னோரன்ன பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை யார் காப்பாற்றுவது? இனி எங்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் - இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் தமது அங்கலாய்ப்பை தமிழனிடம் பதிவு செய்தார்.

இந்நிலையில் நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சிறுநீரகநோய், புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கான மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதய மற்றும் சுவாச நோய்களுக்கான மருந்துகள், இன்சுலின் வகைகள், சத்திரசிகிச்சைகளின்போது முழுமையாக மயக்கமடையச் செய்யும் மருந்துகள், வலி நிவாரணிகள் மற்றும் சிறுவர்களுக்கான பாணி மருந்து உள்ளிட்ட பல்வேறு மருந்துகள் கடும் தட்டுப்பாடாக உள்ளன.

மேலும், புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக புற்றுநோயை குணப்படுத்தக்கூடிய மருந்துகள் இல்லை.

விலையேற்றத்தின் காரணமாக இவ்வகையான மருந்துகளை தனியார் மருந்தகங்களில் மக்கள் கொள்வனவு செய்ய முடியாத நிலையுள்ளது.

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு மற்றும் சுகாதார நிலையை கருத்திற்கொண்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இதுதொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முறைப்பாடொன்றையும் முன்வைத்துள்ளது.

நாட்டில் பாரிய மருந்து தட்டுப்பாடு நிலவும் நிலையில், இதுதொடர்பில் சுகாதார அமைச்சு ஒரு நிலையான தீர்மானத்தை எடுக்காதிருப்பது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் எழுச்சியை தடுக்கவில்லை!...

ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக மற்றும் ஜெனரல் தயாரத்நாயக்க ஆகியோர் அடங்கிய மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு இந்த பரிந்துரையை செய்துள்ளது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தலைமைத் தளபதியாக வழங்கிய உத்தரவுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவினால் வழங்கப்பட்ட உத்தரவுகள் என்பன ஜெனரல் சவேந்திர சில்வாவினால் களத்தளபதிகளுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படவில்லை என விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், கும்பல் வன்முறையை அடக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து தெளிவான அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படவில்லை, இது கடமையை வேண்டுமென்றே புறக்கணிப்பதாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதையும், நபர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும், களத்தில் இருந்த இராணுவத்தினரால் தடுக்க முடியவில்லை.

இந்த அறிக்கை கடந்த வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நீதியரசர்கள் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர். மரிக்கார் அடங்கிய இரு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மூவரடங்கிய விசாரணைக்குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவ, நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தார்.

காலி முகத்திடலில் ஏற்படக்கூடிய மோதல்கள், வன்முறைகள் தொடர்பாக மே 8 அன்று நேரடியாகவும் மற்றும் மே 9 காலையில் வட்ஸ்அப் வழியாகவும் அரச புலனாய்வு சேவையினால் பாதுகாப்பு செயலாளருக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்தது. அந்த எச்சரிக்கை அறிவித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் மே 9ஆம் திகதி பிற்பகல் காலி வீதி மற்றும் காலி முகத்திடலில் இடம்பெற்ற வன்முறைகள் தடுக்கப்பட்டிருக்கலாம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே புலனாய்வு அறிக்கையின் பிரதியொன்று, பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அவர் புலனாய்வு அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுத்து, அங்கு பொலிஸாரை அனுப்பினார். எனினும், தவறான தகவல்தொடர்பு மற்றும் வளர்ந்துவரும் தரை நிலைமையின் மோசமான மதிப்பீடு காரணமாக, நிலைமையை திறம்பட சமாளிக்க, பணியில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்று அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின் வெளியேறிய குண்டர்கள், அலரி மாளிகை நுழைவாயிலிலும், காலி முகத்திடலிலும் உள்ள போராட்டத்தளத்திற்கு செல்வதை தடுக்கத் தவறியதன் விளைவாக வன்முறை மோதல்கள் ஏற்பட்டதாக விசாரணைக்குழு அவதானித்துள்ளது. அதைத் தொடர்ந்து நாடு தழுவிய குழப்பத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

தாம் தனிப்பட்ட முறையில் உத்தரவு பிறப்பிக்கும் வரை படைகளை அனுப்ப வேண்டாம் என இராணுவத் தளபதி களத் தளபதிகளுக்கு அறிவித்திருந்தார். அவ்வாறு செய்வதன் மூலம், களச் சூழ்நிலைக்கேற்ப, கும்பல் வன்முறையை அடக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக தரைப்படைத் தளபதிகளை தடுக்க அவர் முன்முயற்சி எடுத்தார் என அறிக்கை கூறுகிறது.

சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்காக செயல்பாட்டுத் துருப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்பு இல்லாததால், அவசியமான நேரத்தில் தீர்க்கமாகச் செயல்படத் தயக்கம் ஏற்பட்டது என்றும் விசாரணைக்குழு முடிவு செய்துள்ளது.

படைவீரர்கள் மற்றும் பொலிஸார் தங்கள் கடமைகளைச் செய்யும்போது அவர்களின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கான இழப்பீடு முன்னுரிமையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

பரவலான ஊழல் மற்றும் பொது நிதியை தவறாகப் பயன்படுத்துதல் என்ற பொதுவான நம்பிக்கையே வன்முறைப் போராட்டங்களுக்கு மக்களைத் திரட்டுவதற்கான அடிப்படைக் காரணம் என்று விசாரணைக்குழு கூறுகிறது.

நாட்டை முன்னேற்ற...

10 வருடங்களாவது வேண்டும். முன்னர் போன்று செயற்படுவதற்கு எனக்கு சக்தி இல்லை. ஆனால், நாட்டுக்காக முன்வருபவர்களுக்கு ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்குவேன்' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

யக்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த போவதில்லை என்கிறார்கள். மறுபுறம் மார்ச் மாதம் 03ஆம் திகதி தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடமளிக்கவும் மாட்டார். ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து எத்தனை வேட்பாளர்களை போட்டியிட வைத்தாலும் எந்தவொரு பிரதேசத்திலும் அவர்களால் வெற்றியடைய முடியாது. அதன் காரணமாகவே, தேர்தலை காலந்தாழ்த்த முயற்சித்து வருகிறார்கள். ஒரு வருடத்துக்கு தேர்தலை எதிர்பார்க்க முடியாது.

பல வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மனச்சாட்சி இன்றியும் வரையறை இன்றியும் மக்களின் சொத்துகளை திருடினார்கள். அதனாலேயே நாடு இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. நாட்டிலுள்ள சகல வளங்களும் தமக்கே உரித்தானது, வேறு யாருக்கு உரித்தல்ல, தானும் தனது புத்திரர்களுக்கும், மனைவிக்கு மனைவியின் உறவினர்களுக்கும் மாத்திரமே நாட்டிலுள்ள சொத்துகள் உரித்துடையவை என்ற மனநிலையிலேயே ஆட்சி செய்தார்கள். இந்த முறையின் காரணமாகவே அவர்களை இளைஞர் யுவதிகள் அனைவரும் ஒன்றிணைந்து துரத்தியடித்தார்கள்.

அவ்வாறு துரத்தியடித்தாலும் இன்று பலவந்தமாக ஆட்சியிலிருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தை அழுத்தமாக பிடித்துக்கொண்டுள்ளார். அவர்கள் கூறும் கதைகளை நம்பி வாக்களித்தோம். அதற்கான பிரதிபலனையே தற்போது அனுபவித்து வருகிறோம். மஹிந்த ராஜபக்ஷ, 09 வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த விதம், கொள்ளையடித்த விதம், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரை கொலை செய்த விதம் என அவர் செய்த, அவரினால் முன்னெடுக்கப்பட்ட சகல குற்றச்செயல்களும் நாம் அறிந்ததே. அதனாலேயே அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றோம். ஆனால் யாரும் அதனை செவிமடுக்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவே நாட்டின் தலைவர், நானே நாட்டை பாதுகாப்பேன் என்றதும் எதைப் பற்றியும் சிந்திக்காமல் 69 இலட்சம் மக்களும் வாக்குகளை பதிவு செய்தார்கள். தற்போது சகல செயற்பாடுகளையும் நெருக்கடிக்குள் ளாக்கிக்கொண்டு, மீண்டும் எனக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமெனில் 10 வருடங்களாவது வேண்டும். முன்னர் போன்று செயற்படுவதற்கு எனக்கு சக்தி இல்லை. நாட்டை கட்டியெழுப்புவதற்காக முன்வருபவர்களுக்கு நான் ஆலோசனைகளை நிச்சயமாக பெற்றுக்கொடுப்பேன் என்றார்.

இமாலய நிலநடுக்கத்தை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் புத்தல பிரதேசத்தில் சில நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இலங்கையின் பிரதான புவியியல் நில தட்டுக்களுக்கிடையிலான எல்லையிலேயே இவ்வனைத்து நில அதிர்வுகளும் பதிவாகியுள்ளன.

இவை பல மில்லியன் ஆண்டுகளாகக் காணப்படுபவையாகும். அத்தோடு இவை முன்னைய காலங்களில் செயற்திறன் கொண்டவையாகக் காணப்பட்டிருக்கலாம் என்று 1984இல் சிரேஷ்ட புவியியலாளர் பேராசிரியர் சி.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ள வரிபடத்தை அவதானிக்கும்போது அவை புவியியல் நில தட்டுக்களுக்கிடையிலான எல்லையிலேயே பதிவாகியுள்ளமையை தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தியாவின் வடக்கில் இமாலய பிரதேசத்தில் 8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகக் கூடும் என அந்நாட்டு புவிசரிதவியல் திணைக்களமொன்று தெரிவித்துள்ளது.

அதற்கமைய இமாலய பிரதேசத்தில் நில நடுக்கம் ஏற்பட்டால் அது எவ்வாறு இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். அவ்வாறு நில நடுக்கம் ஏற்பட்டால் அதனை இலங்கையில் குறிப்பாக கொழும்பில் உணர முடியும்.

எனவே எதிர்பாராதவிதமாக அவ்வாறு நிலநடுக்கம் எதனையும் உணர்ந்தால் உயர் கட்டடங்களில் தொழில் புரிபவர்கள் உடனடியாக அவற்றிலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

ஒரு சில செக்கன்களுக்கு மாத்திரமே நில அதிர்வுகள் ஏற்படும். எனவே பாரிய கட்டடங்களிலிருந்து வெளியேறுவதற்கு அந்த நேரம் போதுமானதாக இருக்காது. எனவே இது தொடர்பில் அனைவரும் அவதானமாக செயற்பட வேண்டும் என்றார்.

13ஆம் திருத்தத்தை...

மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (25) நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர், தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டியது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடமையாகும். நிதி இல்லை என்றால் தேர்தலை நடத்தவும் முடியாது என்பது உண்மை. ஆனால், கடமைப்பட்டுள்ளதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை இருந்ததால், எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு தேர்தலையும் காலந்தாழ்த்தவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் தேர்தலில் வெற்றியடையும் என்பதை உறுதியாக கூற முடியாது.

பணம் இருந்தாலும் தேர்தலை நடத்த முடியாது என்று ஜனாதிபதி கூறுவாரானால் அது தவறான விடயமாகும். தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

அதேபோன்று, அவரின் கட்சி நிலைமைக் குறித்தும் அவர் அறிந்து வைத்திருக்கலாம். அரசாங்கம் தொடர்பிலான மக்களின் நிலைப்பாட்டை தேர்தலொன்றின் முடிவிலேயே இலகுவாக அறிந்துக்கொள்ள கூடியதாக இருக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் வேறு எதுவும் செய்ய முடியாது.

பிரதேச சபைகளுக்கும், நகர சபைகளுக்கும் உறுப்பினர்களை எம்மால் நியமிக்க முடியாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலேயே அவர்கள் நியமிக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கான திறன் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும். தற்போது பிரதமரொருவர் இருப்பதால், என் தொடர்பில் எந்த பிரச்சினையும் ஏற்படாது.

13ஆவது அரசியலமைப்பை மீண்டும் பலப்படுத்துவதற்கான அவசியம் எதுவும் தற்போது இல்லை என்றே கருதுகிறேன். 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால், அந்த திருத்தத்தை வலுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றே நாங்கள் கூறுகிறோம் என்றார்.

தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் மாசி மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை

மேஷம் வீட்டுக்கான முக்கிய செலவுகளை இன்று செய்வீர்கள். காரியங்கள் சற்றுத் தாமதமாகி பின் நிறைவேறும்.

ரிஷபம் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும், உடல் நோய்கள் குணமடையும்.

மிதுனம் ஆனவத்தை அடக்கினால் வெற்றி நிச்சயம், பயணங்களைக் குறைத்துக் கொண்டால் செலவுகள் கட்டுப்படும்.

கடகம் முக்கிய நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடுவீர்கள், வெளி இடப் பயணத்தால் நன்மைகள் உண்டு.

சிம்மம் உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள், புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

கன்னி தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்துங்கள், சொத்துகளை உரிய முறையில் பேணுங்கள்.

துலாம் தொழில் இடத்தில் எதிலும் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள், உடல், மனம் இரண்டும் சோம்பிக் காணப்படும்.

விருச்சகம் கௌரவமாக நடத்தப்படுவீர்கள், எண்ணிய காரியங்களை எளிதில் முடிப்பீர்கள்.

தனுசு நீங்கள் எதிர்பார்த்த பணத்தொகை கிடைக்கும், எதிரிகளால் நன்மைகள் ஏற்படும் நாள்.

மகரம் மனதை அங்குமிங்குமாக அலையவிடாதீர்கள், அதிர்ஷ்டத்தை நம்பி பணத்தை வீண்டிக்காதீர்கள்.

கும்பம் யாரையும் நம்பி இரகசியங்களை வெளிப்படுத்தாதீர்கள், வீடு வாகனங்களால் தொல்லைகள் உண்டு.

மீனம் நீங்கள் நினைத்ததை எதையித்துடன் சாதிப்பீர்கள், தேவைக்கேற்ப பணம் நிறைவைத் தரும்.

திதி : அஷ்டமி பி.இ. 2.22 வரை பின் நவமி

நட்சத்திரம் : ரோஹிணி முழுவதும்

யோகம் : அமிர்த யோகம் (சுப காரியம் நன்மை)

வார சூலை : வடமேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

நல்ல நேரம் : பி.ப. 12.26 – 1.26 மணி வரை

ராகு காலம் : 7.56 – 9.26 மணி வரை

எமகண்டம் : 10.56 – 12.26 மணி வரை

குளிகை : 1.56 – 3.26 மணி வரை

சந்திராஷ்டமம் : துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

தன அதிர்ஷ்டம்: கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)

விஷேட தினம் : ----

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

துறைமுக நகரில் புதிய சட்ட மேம்படுத்தல்களை முன்னெடுப்பதற்காக குழுவொன்றை அமைக்குக!

இளம் சட்டத்தரணிகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

கடல்சார் பொருளாதாரச் சட்டத்தில் நிபுணத்துவத்தைப் பெறுமாறும் துறைமுக நகரத்தில் புதிய சட்ட அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு குழுவொன்றை அமைக்குமாறும் இளம் சட்டத்தரணிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

புதிய துறைமுக நகரமானது கடல்சார் பொருளாதாரச் சட்டத்துடன் கூடிய நிதி நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் கொழும்பு நோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

நோயல் கல்லூரியில் பழைய மாணவனாகக் கழித்த காலத்தையும், தனது பண்பையும் பொறுப்பையும் வளர்த்துக்கொள்ள கல்லூரியிலிருந்து தாம் பெற்ற பங்களிப்பையும் ஜனாதிபதி இங்கு நினைவுகூர்ந்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக பிரபலமற்ற கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிட்டதாக தெரிவித்த ஜனாதிபதி, நோயல் கல்லூரி மாணவராக சவால்களை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

இந்நாட்டின் சட்டத்துறைக்காக நோயல் கல்லூரி ஆற்றிய பங்களிப்பை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் உருவாகக்கூடிய புதிய சட்டத்துறைகள் குறித்தும் இளம் சட்டத்தரணிகளுக்கு எடுத்துரைத்தார்.

துறைமுக நகரத்தை நிதி நிலையமாக மாற்றுவது தொடர்பான சட்டத்துறை பிரவேசத்திற்காக இளம் சட்டத்தரணிகளை ஊக்குவித்த ஜனாதிபதி, பொறுப்புகள் மற்றும் தலைமைத்துவப் பாத்திரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இதன்போது, நோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரொஹான் சஹபந்து வரவேற்று உரையாற்றியதுடன், அதன் செயலாளராக இருந்து ஓய்வுபெறும் ஹர்ஷன மாதாராச்சி கடந்த வருட அறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

நோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ரொஹான் சஹபந்து மீண்டும் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக தெரிவுசெய்யப்பட்ட சித்த கனுவனாராச்சி நன்றியுரையை நிகழ்த்தினார்.

சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம், நோயல் கல்லூரி அதிபர் ஆர்.எம்.ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உழவு இயந்திரத்தில் சிக்கி 17 வயது இளைஞன் பலி

(எவ்.ஆர்.எம்.பர்ஹான்)

உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்டு திருகோணமலை, தோப்பூரில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று (26) காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் தோப்பூர், செல்வநகர் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய அமீர் அலி அஸார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த உழவு இயந்திரச் சாரதியும் உதவியாளராக இருந்த உயிரிழந்த இளைஞனும் வீடொன்றில் வைத்து உழவு இயந்திரத்தை சீர்செய்துகொண்டிருந்தபோது உழவு இயந்திரம் இயங்கியதில் பின்னால் இருந்த இளைஞன் கலப்பைப் பகுதிக்குள் சிக்குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் ஜனாஸா தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மொரட்டுவை, கல்தெமுல்ல பகுதியில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் இருவர் படுகாயம்

மொரட்டுவ, கல்தெமுல்ல பிரதேசத்தில் குப்பைக் குவியலுக்கு தீ வைக்கச் சென்றபோது திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தில் கணவன் மற்றும் மனைவி படுகாயமடைந்த நிலையில், களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த தம்பதியின் மகள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டாளரின் தாயும் தந்தையும் தமது வீட்டுக்கு அருகிலுள்ள குப்பைமேட்டில் குழி தோண்டி தீ வைத்ததாகவும், அங்கு பாரிய வெடிப்பொன்று இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் பெண்ணின் இடுப்பு மற்றும் கைகளிலும், அவரது கணவனின் கால்களிலும் காயம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாடாளுமன்றில் தகாத வார்த்தைப் பிரயோகம்; சுசில் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தகாத வார்த்தையை பயன்படுத்தியமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும்போதே பிரேமஜயந்த குறித்த வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்தினார் என்று முறையிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இருந்த கெமரா அமைச்சரிடமிருந்து விலக்கியபோதும் அமைச்சர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியபோது, அவரது ஒலிவாங்கி இயங்கிக்கொண்டிருந்தது.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இந்த விடயத்தை முன்வைத்து, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

நானுஓயாவில் ஆற்றில் நீராடச்சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி மரணம்

நானுஓயா - கிரிமெட்டிய தோட்டப் பகுதியில் ஆறொன்றில் நீராடச்சென்று நீரில் மூழ்கி காணாமல்போன இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டெல்போர்ட் மேல்பிரிவைச் சேர்ந்த 18 வயதான இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிரிமெட்டிய பகுதியிலுள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த குறித்த இளைஞர், நண்பர்களுடன் நீராடச் சென்றிருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், காணாமல்போன இளைஞரை தேடி பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தேடுதல் பணிகளை முன்னெடுத்தனர்.

அத்தோடு மேலதிக உதவிகளுக்காக கடற்படை சுழியோடிகளும் சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்டு தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது நேற்று மாலை குறித்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே இடத்தில் இதற்கு முன்னதாக, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சுமார் 4 பேர் வரை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனரென பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் அவுஸ்திரேலிய ஆனைக்கொய்யா இலங்கையில்

200 ஏக்கரில் பயிரிட நடவடிக்கை

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதற்காக அவுஸ்திரேலிய இனமான (HASS) ஆனைக்கொய்யா பழக்கன்றுகளை இலங்கையில் பயிரிட்டு விரிவுபடுத்த விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆனைக்கொய்யா மரக்கன்றுகளை பயிரிடுவதற்காக பதுளை மாவட்டத்தில் 200 ஏக்கர் காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த ஆனைக்கொய்யா மரக்கன்றுகள் அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பண்டாரவளை பிரதேசத்தில் நடப்பட்டவுள்ளன.

HASS ஆனைக்கொய்யா பழத்திலிருந்து உற்பத்திசெய்யப்படும் எண்ணெய்க்கு சர்வதேச சந்தையில் அதிக கேள்வி உள்ளதென்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வி வ சா ய த் து ற ை ந வீ ன ம ய ம ா க் க ல் திட்டத்தில் ஆனைக்கொய்யா பழங்களை பயிரிடுவதற்காக பதுளை மாவட்டத்திலிருந்து சுமார் 1000 விவசாயக் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதுடன், அவர்களுக்கு தேவையான அனைத்து தொழில்நுட்பம், நாற்றுகள் மற்றும் நிதியுதவி என்பவற்றை வழங்குவதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த சாகுபடியில் ஒரு மரத்திலிருந்து சுமார் 200 கிலோ பழங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், மூன்றாண்டுகளில் அதிக வருமானத்தையும் ஈட்ட முடியும்.

மாணிக்கக்கற்களை விற்பனைக்குத் தருவதாக தெரிவித்து 15 இலட்ச ரூபா கொள்ளை

தாயும் மகனும் மஹாஓயா பொலிஸாரால் கைது

மஹாஓயா பகுதியைச் சேர்ந்த வர்த்தகரிடம் மூன்று மாணிக்கக்கற்களை விற்பனை செய்வதாகக் கூறி 15 இலட்ச ரூபாவை கொள்ளையடித்த சந்தேகநபர் ஒருவரை மஹாஓயா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதியை வைத்திருந்ததாகக் கூறப்படும் சந்தேக நபரின் தாயாரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூன்று மாணிக்கக்கற்களை தருவதாகக் கூறி வியாபாரியை மஹாஓயா பகுதிக்கு அழைத்துச் சென்ற சந்தேக நபர், கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில், வர்த்தகர் மஹாஓயா பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரையும் அவரது தாயையும் கைதுசெய்தனர். சந்தேகநபர் மஹாஓயா பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனவும் அவரது தாயார் 58 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர் மற்றும் தாயார் நேற்று (26) தெஹியத்தகண்டிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

புகையிரதத் திணைக்களத்துக்கு சொந்தமான காணி - கட்டடங்களை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை

மேலதிக வருவாயை ஈட்டலாமென இணைப் பணிப்பாளர் குணசிங்க தெரிவிப்பு

புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான பயன்படுத்தப்படாத காணி மற்றும் கட்டடங்களை தனியாருடன் இணைந்து அபிவிருத்திசெய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன், புகையிரதத் திணைக்களத்திற்கு இத்திட்டத்தின் மூலம் மேலதிக வருமானம் ஈட்டும் முறையொன்று தயாரிக்கப்படவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் பிரியூ.ஏடி.எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

நாவலப்பிட்டி புகையிரத நிலையம் தொடக்கம் நானுஓயா புகையிரத நிலையம் வரையான புகையிரத நிலையங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக ஹட்டன் புகையிரத நிலையத்திற்கு வந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரயில்களில் யானைகள் இறப்பது தொடர்பாக பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும், புகையிரதத்தில் யானைகள் இறப்பதை குறைக்கும் திட்டத்தை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்த ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக அகழ்ந்த மணலை கைப்பற்றி கொண்டுசெல்லும் வழியில் பொலிஸார் விற்பனை

தெதுரு ஓயாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுசெல்ல முற்பட்ட ஒருதொகை மணலை கைப்பற்றி கொண்டுசெல்லும் வேளையில் அதற்கு பாதுகாப்பிற்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதில் ஒரு பகுதியை விற்பனை செய்தமை தொடர்பில் வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்கவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெல்வல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திஸ்ஸாவ பிரதேசத்தினூடாக பாயும் தெதுரு ஓயாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அள்ளப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு இந்த மணலை கைப்பற்றியது.

குறித்த பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றின் மண்டபம் அமைப்பதற்காக தனியார் காணி ஒன்றினூடாக மணல் அள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர், நீதிமன்ற நடவடிக்கைக்காக லொறிகளில் மணலை ஏற்றி, வெல்வல பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரும்போது, குறித்த லொறிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரகசியமாக மணலை விற்பனைசெய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தேர்தலை காலந்தாழ்த்துவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் சூழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப் பாட்டப் பேரணியின்போது... (படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

மூதூர் பகுதியில் கடலுக்குச் சென்று மாயமான மீனவர் சடலமாக மீட்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மூதூர் பகுதியில் கடலுக்குச் சென்ற மீனவரொருவர் காணாமல் போயுள்ள நிலையில், நேற்று (26) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 24ஆம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் வீட்டிலிருந்து மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்று வீடு திரும்பாத நிலையில், கிராம மக்கள் மற்றும் மீனவர்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த நபரின் சடலம் கடலில் மிதந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான மூதூர், பஹ்ரிய நகரைச் சேர்ந்த அருளாளந்தம் முகமட் யூசுப் (35 வயது) எனவும் தெரியவருகின்றது. மரணம் தொடர்பிலான விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விநோத மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 27ஆம் திகதி, திங்கட்கிழமை

தவிர்க்க முடியாத மக்கள் கிளர்ச்சி!

அதிகரித்துள்ள மின் கட்டணத்தை செலுத்த முடியாத 6 இலட்சத்துக்கும் அதிகமான மின் பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் இலங்கை மின்சார சபை வட்டாரங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் ஆபத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றன.

பொருளாதார நெருக்கடியின் ஆரம்பத்திலிருந்து மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களை செலுத்துவது 40 வீதத்தால் குறைந்துள்ளதாக மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைகளின் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில், அதிக மின் கட்டணம் காரணமாக, நுகர்வோர் ஏற்கனவே மின் சாதனங்களின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்துள்ளனர். இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அதிக மின்சாரத்தை உறிஞ்சும் குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார கேத்தல்கள் மற்றும் கூரை மின்விசிறிகள் ஆகியவற்றின் பயன்பாட்டை ஏற்கனவே பெரும்பாலான மக்கள் படிப்படியாக நிறுத்திவிட்டனர்.

இதேவேளை, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் சாதாரண மக்களால் சமாளிக்க முடியாதளவு எகிறியதை தொடர்ந்து, மின்சாரம் மற்றும் தண்ணீரை மோசடியாக பெற்றுக்கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும், எதிர்காலத்தில் இது மேலும் அதிகரிக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமாக மின்சாரம் மற்றும் தண்ணீரைப் பெறும் நபர்களுக்கு எதிராக கட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு இரண்டு நிறுவனங்களும் உத்தியோகத்தர்களை பணித்துள்ளன. மின்சாரம் மற்றும் குடிநீர்க் கட்டணம் அதிகமாக உள்ளதால், அன்றாட தேவைக்கு செலவளிக்க வேண்டிய பணத்தை, அந்த கட்டணத்தை செலுத்தவே செலவிட வேண்டியுள்ளதாக, நுகர்வோர் கூறுகின்றனர்.

இலங்கையின் மொத்த மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை கமார் 80 இலட்சம். மொத்த குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 24 இலட்சம். பொருளாதார பாதிப்புகளால் புதிய இணைப்புகள் பெறுவோரின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின் கட்டணத்தை செலுத்தாத பாவனையாளர்களின் சிலப்பு எச்சரிக்கை பட்டியலுக்காக மின் துண்டிப்பை செய்யச் செல்லும் மின்சார சபையின் பணியாளர்கள் மீது பாவனையாளர்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. ஆனாலும், அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்களுக்காக அரச பணியாளர்களை நோவதில், அவர்கள் மீது வெறுப்பைக் காட்டுவதில் அர்த்தமில்லை.

இங்கே இன்னுமொரு முக்கியமான விடயத்தை கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது. மின் கட்டண, நீர்க் கட்டண அதிகரிப்பினால் பாரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டு அவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் தொழில்களை இழக்கும் அபாயமான நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு எதுவித நிவாரணத்தையும் வழங்கக் கூடிய நிலையில் அரசாங்கமும் இல்லாத காரணத்தினால் ஒட்டுமொத்த பாதிப்பு நிலைமை தீவிரமடைந்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி, அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்டுள்ள இந்தத் தாக்கங்களுக்கு பரிகாரமாக நிவாரணம் வழங்கவேண்டும் அல்லது கட்டண நிலுவையால் சேவைகளை துண்டிக்காமல் பகுதியான கொடுப்பனவு செலுத்தும் முறையொன்றையாவது அறிமுகப்படுத்த வேண்டும்.

கடன்களை பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருமானத்தை அதிகரிக்க முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வரி வருமானத்தை அதிகரிப்பதால் பெரும் பொருளாதார சுமைகளை விரும்பியோ, விரும்பாமலோ மக்கள் மீது ஏற்றிவிட்டிருக்கிறது ரணிலின் அரசு.

இதனால்தான் என்னவோ அரசாங்கம் மக்கள் மீது முறையற்ற சுமைகளை சுமத்துவதன் எதிரொலியாக விசாலில் மீண்டுமொரு மக்கள் போராட்டம் வெடிக்கவுள்ளதாக புலனாய்வுத்துறை அரசுக்கு அறிக்கையிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தகவலால் அதிர்ச்சியடைந்துள்ள அரசு, போராட்டங்களை ஒடுக்கும் திட்டங்களை வகுப்பதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான 'கோட்டா கோ ஹோம்' போராட்டத்தை விட தீவிரமான போராட்டமாக அது வெடிக்குமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இளையவர்கள், மாணவர்கள் முன்னணி வகிக்கும் இந்தப் போராட்டம் இவ்வருட நடுப்பகுதியில் வெடிக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

முறையற்ற வரிச்சுமைகளால் மக்கள் தற்போது திண்டாட ஆரம்பித்துள்ளனர். அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளும் சாதாரண மக்களால் தாங்க முடியாத நிலைமையில் காணப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு எதிர்வரும் சித்திரை மாதத்தில் தீவிரமடையலாமென்றும், அதை தொடர்ந்து மக்கள் போராட்டம் ஆரம்பிக்கக் கூடுமென்றும் அந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையடுத்து, அரசுக்கு எதிரான போராட்டங்களை முடக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்பின் முக்கிய பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி, போராட்டக்காரர்கள் நுழைவதை தடுக்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

நேற்றைய தினமும் தேசிய மக்கள் சக்தியின் போராட்டத்தை முடக்க பாதுகாப்புத்துறையின் தீவிர முயற்சிகளை காண முடிந்தது. மக்கள் போராட்டங்களை எப்படி முடக்கலாம் என்பதை யோசிக்காமல், மக்களை எப்படி காப்பாற்றலாம் என்று அரசாங்கம் யோசித்தாலே போதுமானது. இல்லையேல் பெரும் கிளர்ச்சி ஒன்று உருவாவதை தடுக்க முடியாமற்போய்விடும்.

சானியாவுக்கு பிரியாவிடை!

சானியா மிர்ஸா சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் இருந்து விடைபெறுகிறார். ஆறாவது வயதில் தொடங்கிய டென்னிஸ் பயணம் தான் அவரது வாழ்க்கை, சர்வதேச அளவிலான அனைத்துப் போட்டிகளிலும் பங்கெடுத்து விடைபெறுகிறது. டென்னிஸ் வீரராங்கனையாக மட்டுமல்லாமல், பாலின சமத்துவத்துக்கும் மகளிர் மேம்பாட்டுக்கும் அடையாளமாகவும் திகழ்ந்தவர் சானியா மிர்ஸா என்று வரலாறு பதிவு செய்யும்.

மிகுந்த மனத்துணிவுடனும் உற்சாகத்துடனும் அவர் டென்னிஸ் விளையாட்டின் ஒவ்வொரு கட்டமாக சாதனைகளை நிலத்தில் முன்னேறியதை விளையாட்டு உலகம் வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் பார்த்தது. விளையாட்டு உலகில் சாதனை படைக்க விரும்பிய ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு சானியா மிர்ஸா முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார்.

பத்திரிகைகளில் விளையாட்டு நிருபராக பணியாற்றிய தந்தை இம்ரான் மிர்ஸாவும் தாயார் நஸீமாவும் சிறுவயதிலேயே அவரது டென்னிஸ் மீதான ஆர்வத்தை உற்சாகப்படுத்தி ஊக்கமளித்தனர். மும்பையில் பிறந்து, ஹைதராபாத்தில் அவர்களது குடும்பம் குடியேறியதைத் தொடர்ந்து, சானியா மிர்ஸாவின் டென்னிஸ் பயிற்சி தொடங்கியது. பாடசாலைப் பருவத்தில் தொடங்கிய டென்னிஸ் மைதானத்துடனான சானியா மிர்ஸாவின் காதல், 2003இல் விம்பிள்டன் ஜூனியர் சாம்பியனாக சர்வதேச டென்னிஸை எட்டியது.

அடுத்த ஆண்டே, மகளிர் டென்னிஸ் சங்கத்தின் வீராங்கனைக்கான பட்டம் வென்ற முதல் இந்தியப் பெண் வீராங்கனையாக உயர்ந்தார் அவர். ஜூனியர் டென்னிஸில் ஒற்றையரில் 10 பட்டங்களையும் இரட்டையரில் 13 பட்டங்களையும் வென்றார். 2005 அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் சானியா மூன்றாவது சுற்றை அடைந்தபோது அவரை உலகமே வியந்து பார்த்தது. அவர் அடுத்த சுற்றுக்கு முன்னேறவில்லை என்றாலும் கூட, மோதித் தோற்றது செரீனா வில்லியம்ஸுடன் எனும்போது அந்தத் தோல்விகூட வெற்றியாகவே கருதப்பட்டது.

அதே ஆண்டு யு.எஸ்.பகிரங்க டென்னிஸ் தொடரில் நான்காவது சுற்றை அடைந்தார். விம்பிள்டனில் நான்கு முறை அரையிறுதியை எட்டினார். 2007இல் உலக டென்னிஸ் தரவரிசையில் 27ஆவது இடத்தை எட்டிப் பிடித்தார் சானியா மிர்ஸா. கையில் காயம் ஏற்பட்டதால் ஒற்றையர் போட்டிகளில் இருந்து விடைபெற

தோற்றபோது அதற்காக அவர் துவண்டுவிடவில்லை. இரட்டையர் விளையாட்டில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அவரது அந்த முடிவு அடுத்தடுத்த வெற்றிகளைத் தேடித்தந்தது.

2009இல் மகேஷ் பூபதியுடன் இணைந்து அவுஸ்திரேலிய பகிரங்க தொடர் பட்டம் பெற்றதுடன், 2012இல் பிரெஞ்ச் பகிரங்கத் தொடரிலும் 2014இல் யு.எஸ். பகிரங்கத் தொடரிலும் கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்றார். சானியா மிர்ஸாவின் பட்டம் வென்ற மூன்று கிராண்ட்ஸ்லாம் இரட்டையர் போட்டிகளிலும் அவருடன் இணையாக விளையாடியவர் மார்ட்டினா ஹிங்கிஸ்.

ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள்

இரட்டையர் பிரிவிலும் கலப்பு இரட்டையர் பிரிவிலும் தலா மூன்று பட்டங்கள் உட்பட அவருடைய டென்னிஸ் பயணத்தில் வென்ற மொத்த பட்டங்கள் 47. இரட்டையர் பிரிவில் உலகத்தின் முதலாவது இடம் வரை எட்ட முடிந்தது. ஒற்றையரில் 27ஆவது இடம் வரையிலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எட்டு பதக்கங்களும், கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு பதக்கங்களும் வென்ற சாதனையும் சானியா மிர்ஸாவுடையது. இவையெல்லாம் இந்தியாவில் வேறு எவராலும் அதற்கு முன்பு எட்ட முடியாத உயரங்கள்.

டுபாய் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளுடன் தனது 20 ஆண்டு தொழில்முறை விளையாட்டிலிருந்து விடைபெற்றார் சானியா மிர்ஸா. எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் சற்றும் பதறாமலும் மனம் தளராமலும் எதிர்கொண்டவர் அவர்.

இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த பெண்ணான சானியா மிர்ஸா டென்னிஸ் மட்டையுடன் போட்டி மைதானத்தில் இறங்கியதை விமர்சித்தவர்கள் உண்டு.

அவரால் ஏனைய வீரர்களுடன் தாக்குப் பிடிக்க முடியுமா என்று சந்தேகம் கொண்டவர்களும் உண்டு. அவர் பாகிஸ்தான் நாட்டு கிரிக்கெட் வீரர் ஷொயப் மாலிக்கை திருமணம் செய்துகொண்டபோது, அதை விவாதமாக்கியவர்கள் உண்டு. இதுபோன்ற எந்த எதிர்ப்பையும் கவனத்தில் கொள்ளாமல், தனது டென்னிஸ் மட்டையை மட்டுமே இறுகப் பிடித்தபடி, சாதனை மேல் சாதனைகளை நிகழ்த்தியவர் சானியா மிர்ஸா என்கிற வீராங்கனை.

2010இல் திருமணம் செய்து கொண்ட அவர், 2018இல் குழந்தை பிறந்த பிறகு மீண்டும் டென்னிஸ் மட்டையுடன் அவர் மைதானத்தில் இறங்கி போட்டிகளுக்குத் தயாரானபோது யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்து பட்டங்கள் வென்றார் என்பது மட்டுமல்ல, தனது 36ஆவது வயதில் அவுஸ்திரேலிய பகிரங்க தொடர் போட்டியில் விளையாடி விடைபெற்றிருக்கிறார்.

2005இல் 'டைம்' பத்திரிகை அட்டையில் இடம் பெற்றார் என்றால், 2016இல் உலகின் நூறு சாதனையாளர்களில் ஒருவராக அந்த இதழ் சானியா மிர்ஸாவை அடையாளம் கண்டது. பத்மஸ்ரீ, பத்மபூஷண், அர்ஜுனா, கேல் ரத்னா விருதுகளை வழங்கி, சானியா மிர்ஸாவை இந்தியா கௌரவப்படுத்தியதில் வியப்படைய ஒன்றுமில்லை. ஒர் இந்தியப் பெண், சர்வதேச கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்ல முடியும் என்று ஏனைய இந்திய வீராங்கனைகளுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்த சானியா மிர்ஸாவுக்கு தேசம் செலுத்த வேண்டிய மரியாதை அது.

''உங்கள் மீது விமர்சனங்கள் எழுந்தபோது, அதை எப்படி எதிர்கொண்டீர்கள்?'' என்கிற கேள்விக்கு சானியா மிர்ஸா தந்த பதில், ''அட்டை செய்யாமல் கடந்து போய்விடுவேன். சட்டை செய்தால் எனது இலக்கை இழந்துவிடுவேன் என்பது எனக்குத் தெரியும்''

(நன்றி - தினமணி)

தவக்கால சிந்தனை

சீராக்கும் காலம்

ஒரு நிமிடம் அமைதியாக இருந்து, கடவோனை செய்து நமது வாழ்க்கையை மாற்றி அமைத்து சீராக்கும் காலம் இது. பழைய பாவ வாழ்வை அழித்து, புதிய வாழ்வுக்கு இட்டு செல்லும் காலம் இது

ஒருவர் கிறிஸ்துவை மனமாறி ஏற்றுக்கொள்ளும் போது, அவர் பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறார். அவர் பாவத்திற்காக மரணத்தை அனுபவிக்க வேண்டியதில்லை. அவர் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறார். அவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக மாறுகிறார். அவர் தேவனுடைய ராஜ்யத்திற்கு சுதந்திரராக மாறுகிறார். அவர் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறார். அவர் பரலோகத்திற்கு செல்ல தகுதி பெறுகிறார். இவை அனைத்தும் ஒரு நிமிடத்தில் நடந்து விடுகிறது.

ஒருவர் தன் பாவங்களை அறிக்கை செய்து, மனந்திரும்பி, இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, அவர் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறார். அவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக மாறுகிறார். அவர் தேவனுடைய ராஜ்யத்திற்கு சுதந்திரராக மாறுகிறார். அவர் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறார். அவர் பரலோகத்திற்கு செல்ல தகுதி பெறுகிறார். இவை அனைத்தும் ஒரு நிமிடத்தில் நடந்து விடுகிறது. நான் முன்பு அவமானப்பட்டவனாக இருந்தேன். நான் முன்பு அவமானப்பட்டவனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவியாக இருந்தேன். ஆனால் இப்போது நான் பரிசுத்தவானாக மாறிவிட்டேன். நான் முன்பு நரகத்திற்கு செல்ல தகுதி பெற்றவனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் பரலோகத்திற்கு செல்ல தகுதி பெற்றவனாக மாறிவிட்டேன். நான் முன்பு சாத்தானுக்கு அடிமையாக இருந்தேன். ஆனால் இப்போது நான் இயேசுவுக்கு அடிமையாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவத்தின் வல்லமைக்கு கீழ்ப்படிந்தவனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு கீழ்ப்படிந்தவனாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவத்தின் அடிமையாக இருந்தேன். ஆனால் இப்போது நான் நீதியின் ஊழியனாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவத்தின் ஊழியனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் தேவனுடைய ஊழியனாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவத்தின் ஊழியனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் தேவனுடைய ஊழியனாக மாறிவிட்டேன். நான் முன்பு பாவத்தின் ஊழியனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் தேவனுடைய ஊழியனாக மாறிவிட்டேன்.

இன்றைய நாளில்...

* 1700 – புதிய பிரித்தானியா தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
* 1900 – பிரித்தானியத் தொழிற்கட்சி அமைக்கப்பட்டது.
* 1940 – ரேடியோ கார்பன் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1964 – பிசாவின் சாய்ந்த கோபுரம் மேலும் சரிவதைத் தடுக்க இத்தாலிய அரசு உதவி கோரியது.
* 2007 – மட்டக்களப்பு நகரிலுள்ள இலங்கை விமானப் படைமினரின் விமான ஓடுபாதையை நோக்கி விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் இலங்கைக்கான அமெரிக்க, இத்தாலியத் தூதுவர்கள் காயமடைந்தனர்.
* 2015 – ரஷ்ய அறிவியலாளரும் அரசியல்வாதியுமான போரிஸ் நெம்த்சோவ், கிரெம்ளின் அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நக்கல் நமசிவாயம்

போனவாரம் கலியாண வீடொன்டுக்கு போயிருந்தன்... மாப்பிள்ளை செல்வாக்கான ஆள்.. எலெக்ரிசிட்டி போர்ட்டில வேலை செய்யுறாராம்..!

கட்டண அதிகரிப்பால் 50 வீத குடும்பங்களுக்கு மின்துண்டிப்பு

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் அச்சம்

கட்டண அதிகரிப்பு காரணமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களில் மின்சாரம் துண்டிக்கப்படும் அச்சம் காணப்படுவதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணத்தை செலுத்த முடியாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாக அதன் இணை செயலாளர் இசுறு கஸ்தூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 6 மில்லியனுக்கும் அதிகமான மின்சார நுகர்வோர் உள்ளனர்.

அவர்களில் 50 சதவீதமானோர் மின் கட்டண அதிகரிப்பால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் இணை செயலாளர் தெரிவித்துள்ளார்.

உணவு உற்பத்தியாளர்களுக்கு இறக்குமதி முட்டைகள் 30 ரூபாவுக்கு விற்பனை

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் உணவு உற்பத்தியாளர்களுக்கு 30 ரூபாவுக்கு விற்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதியளித்துள்ளார்.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் (STC) இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சந்தைக்கு வெளியிடப்பட மாட்டாது என சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டுக்குள் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சந்தையில் முட்டைப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையிலும், விலைவாசி உயர்வைக் குறைக்கும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதான சந்தேகநபர் தப்பியோட்டம்

நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதி, சார்ஜன்ட் மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போலியான பெயரில் டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சந்தேக நபர், பொலிஸ் அதிகாரிகளிடம் இருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இந்த சந்தேகநபர் கொலை உள்ளிட்ட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளதுடன், அவருக்கு எதிராக விமானப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

மலசலகூடத்துள் சிக்கிய சிறுத்தை மீட்பு

(அந்துவன்)

அட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெரோல் தோட்டத்திலுள்ள தோட்ட குடியிருப்பு ஒன்றின் மலசலகூடத்தில் சிக்கியிருந்த சிறுத்தைக்குட்டியை பிடிக்க நல்லதண்ணி மற்றும் நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் நேற்று (26) பத்திரமாக மீட்கப்பட்டது.

பாதுகாப்பாக மீட்கப்பட்ட சிறுத்தை குட்டியை அதன் தாய் வசிக்கும் பகுதியில் விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை ஹெரோல் தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் அத்தோட்டத்திலுள்ள நாய்களும் சிறுத்தைகளால் வேட்டையாடப்படுவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கொழுந்து பறிக்கும் போட்டி: முதலிடம்பிடித்த சீதையம்மா

(செ.திவாகரன்)

ரதெல்லையில் இடம்பெற்ற கொழுந்துபறிக்கும் போட்டியில் சிறந்த கொழுந்து பறிப்பாளராக சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் இயங்கும் தோட்டங்களில் பெண்களுக்கான தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி சனிக்கிழமை சமர்செட் பிரிவு தேயிலை மலையில் நடைபெற்றது.

குறித்த போட்டிகள் தேயிலை துறையின் எதிர்கால இருப்பினை தக்க வைக்கும் முகமாகவும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த போட்டியில் 44 பெண் தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர். கொழுந்து பறிக்க 20 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் சிறந்த கொழுந்து பறிப்பாளராக தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் 20 நிமிடங்களுக்குள் பத்து கிலோ 450 கிராம் தேயிலை கொழுந்து பறித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. முதலிடத்தை பிடித்த சீதையம்மாவுக்கு மூன்று இலட்ச ரூபா காசோலையும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

நாட்டின் தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 19.14 சதவீத வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மொத்தமாக 19.14 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி இடம்பெற்றுள்ளது.

தவறான கொள்கை முடிவுகள் மற்றும் மோசமான வானிலை என்பன இதில் தாக்கம் செலுத்தியுள்ளன.

இரசாயன பசளைகளுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக தேயிலைகளுக்கான போசாக்கு குறைவடைந்தது.

எவ்வாறாயினும், தற்போது தேயிலை போஷாக்கு பற்றாக்குறையில் இருந்து மீள்வதாக பெருந்தோட்டத் துறையினர் குறிப்பிடுகின்றனர்.

இராகலை பச்சத்தண்ணீர் மாரியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான காணி தனியாரொருவரால் ஆக்கிரமிப்பு

தோட்ட நிர்வாகம் தலையிட்டு தீர்வை வழங்கக் கோரிக்கை

(ஆ.ரமேஸ்)

இராகலை பச்சத்தண்ணீர் மாரியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான நிலத்தை வெளிநபர் ஒருவர் ஆக்கிரமித்து அங்கு கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கும் ஆலய நிர்வாகம், இந்த விடயத்தில் தோட்ட நிர்வாகம் தலையிட்டு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆலய நிர்வாக சபை தலைவர் க.புஸ்பராஜ் தெரிவித்துள்ளதாவது,

இராகலை பிரதேசத்தில் காணப்படும் பிரசித்திபெற்ற ஆலயங்களாக சந்திரமாதா நகர் முருகன் ஆலயம் திகழ்கிறது. அந்த வகையில் இராகலை தோட்டத்தில் அமைந்துள்ள பச்சத்தண்ணீர் மாரியம்மன் ஆலயமும் பிரசித்திபெற்ற ஆலயமாகும்.

இராகலை தோட்ட நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள பச்சத்தண்ணீர் மாரியம்மன் ஆலயம் தோட்ட மக்களின் பொதுவான ஆலயமாகவும் பச்சத்தண்ணீரில் விளக்கு எறியும் வரலாறு கொண்ட ஆலயமாகவும் திகழ்கிறது.

கடந்த காலங்களில் அற்புதங்களை வெளிக்காட்டிய இந்த ஆலயத்தின் முகப்பில் காணப்படும் ஒரு பகுதி தரிசு நிலம் ஆலயத்திற்கு சொந்தமானது என ஆலய நிர்வாக தலைவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு காணப்படும் தரிசு நிலத்தை வெளி மாவட்டத்தை சேர்ந்த தனி நபர் ஒருவர் தான் இந்த இடத்தை நபர் ஒருவரிடம் இருந்து அண்மையில் பணம் கொடுத்து பெற்றுக் கொண்டதாக கூறி அவ்விடத்தில் கட்டடம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

இந்த விடயம் வெளிப்பட இது தொடர்பில் தோட்ட நிர்வாக அதிகாரி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு ஆலய நிர்வாக சபை கொண்டு வந்துள்ளது.

இருப்பினும் ஆலயத்திற்கு உரித்தான அந்த இடத்தில் கட்டடம் அமையும் பட்சத்தில் ஆலயத்தின் முகப்பு மூடப்பட்டு ஆலயத்தின் வெளித்தோற்றம் முற்றாக மறைக்கப்பட்டுவிடும்.

இதனால் ஆலயத்தை பார்த்து அம்மனை தரிசிக்க முடியாது அசௌகரியத்துக்கு அடியார்கள் முகம் கொடுக்க நேரிடுவதுடன் ஆலயத்தின் பெருமைக்கும் பங்கம் ஏற்படும் என ஆலய நிர்வாகத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ் ஆலயத்தின் திருவிழா காலத்தில் ஆலயத்தின் முகப்பில் காணப்படும் தரிசு நிலத்தில் தான் தீ மிதிப்பு மற்றும் அன்னதானம் பகிர்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இந்த நிலையில் தனி நபர் ஆலய இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் அமைத்தால் திருவிழா காலத்தில் நாட்டில் பல பாகங்களிலும் இருந்து அம்மனை தரிசிக்க வரும் பக்த அடியார்களுக்கு இட நெரிசல் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இந்த விடயத்தில் தோட்ட நிர்வாகம் தலையிட்டு ஆலய இடம் தொடர்பாக தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியா – ஏ9 வீதியில் சைக்கிள் – பஸ் மோதி விபத்து

குடும்பஸ்தர் பலி

வவுனியா, ஏ9 வீதி, மூன்று முறிப்பு பகுதியில் நேற்று (26) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா, ஏ9 வீதி, மூன்றுமுறிப்பு பகுதியில் துவிச்சக்கர வண்டியில் குடும்பஸ்தர் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற தனியார் பஸ் ஒன்று மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சைக்கிளில் பயணித்த 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்து, வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இ.போ.சபை மற்றும் தனியார் பஸ் என்பன போட்டிக்கு ஓடியதால் குறித்த விபத்து இடம்பெற்றதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருட்களுடன் 15 இளைஞர்கள் கைது

(அந்துவன்)

சிவனொளிபாதமலையேறுவதற்கு பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் வருகை தந்த 15 இளைஞர்கள் கடந்த இரு நாட்களுக்குள் அட்டன் பொலிஸின் போதை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அட்டன் ரயில் நிலைய வளாகத்தில் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே, ரயிலில் வந்த குறித்த இளைஞர்கள், பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

கொழும்பு, காலி, அநுராதபுரம் மற்றும் குருணாகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின், கஞ்சா, கஞ்சா கலந்த புகையிலை தூள் மற்றும் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகள் என்பன கைதானவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் அட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்களை நாளை (28ஆம் திகதி) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டு, சரீரப் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார்சைக்கிள் – வேன் மோதி விபத்து

இருவர் படுகாயம்

(செ.திவாகரன்)

நுவரெலியா பொலிஸ் பிரிற்குட்பட்ட கெமுனுபுர மார்காஸ்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

பதுளை பகுதியில் இருந்து நுவரெலியாவை நோக்கி பயணித்த வேன் நுவரெலியா கெமுனுபுர மார்காஸ்தோட்டப் பகுதியில் ஸ்ட்ரோபெரி பண்ணைக்கு அருகில் சிறு வீதியில் இருந்து பிரதான வீதியினை கடக்க முயன்ற மோட்டார் சைக்கிள்களுடன் குறித்த வேன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் அம்பியூலன்ஸ் வண்டி மூலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் படுகாயமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி பேராதனை வைத்தியசாலைக்கு விசேட சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இவ்விபத்தானது, வேன் சாரதியின் பாதுகாப்பற்ற மற்றும் கவனயீனமான வாகன செலுத்துகை காரணமாக இடம்பெற்றுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து வேன் சாரதி கைதுசெய்யப் பட்டதுடன், அவரை இன்று திங்கட்கிழமை நுவரெலியா நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சுதேசிய லொத்தர் சபை National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.02.24
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5041
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,310,175.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 3 9 2 2 5 0
கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3283
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,480,964.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 11 17 20 43
ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1496
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 1 8 2 4 1 4
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1071
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,176,078.40
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 12 24 66 69
ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 350
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,547,299.20
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 13 16 19 27
விசேட இலக்கினம் ரிஷபம்
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1389
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 303,141,646.00
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 03 14 44 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

சுதேசிய லொத்தர் சபை National Lotteries Board
சனிக்கிழமை 2023.02.25
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5042
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 40,288,071.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 1 3 8 6 0 6
கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3284
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,886,463.20
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 23 25 26 48
ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1497
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 4 9 1 8 3 2
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1072
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,367,192.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 33 43 49 71
ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 351
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,615,302.40
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 43 44 48 62
விசேட இலக்கினம் மகரம்
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1390
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 303,215,402.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 02 24 51 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு வலியுறுத்தி

தலவாக்கலை – மஸ்கெலியா – கந்தப்பளை மக்கள் போராட்டம்

(பத்தனை - தலவாக்கலை நிருபர்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி தலவாக்கலை, மஸ்கெலியா, கந்தப்பளை உள்ளிட்ட பல நகரங்களில் நேற்றுமுன்தினம் (25) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபாலவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் சுட்சி செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

"தேர்தலை ஒத்திவைத்து மக்கள் சாபத்துக்கு உள்ளாகாதே, தேர்தலை உடன் நடத்து, மனித உரிமைகளுமீறி சர்வாதிகார ஆட்சி செய்யாதே, பொருட்களின் விலையை குறை" என்பன உட்பட பல கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அத்துடன், தமது கோரிக்கைகளை பதாகைகளில் எழுதி அவற்றை தாங்கிப்பிடித்த தவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா பிரதேச அமைப்பாளர் அசோக சேபால உரையாற்றுகையில்,

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் ரணில், ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தை மக்களிடம் இருந்து பறிக்கிறது. நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடிக்க மக்கள் நடவடிக்கை எடுத்தனர். அதேபோல தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெளியேற்ற மக்கள் விரும்புகின்றனர்.

அரசாங்கம் தன்னிச்சையாக உயர்த்திய மின்சாரக் கட்டணத்தை தோட்ட மக்களும் ஏனைய மக்களும் செலுத்த முடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மஸ்கெலியாவில்...

(மஸ்கெலியா நிருபர்)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை உடன் நடத்தக்கோரி நேற்றுமுன்தினம் (25) மஸ்கெலியா எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக அமைதி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நவலக்ஷ சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட பிரதான அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் தலைமையில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

''உடன் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள அனாதரவு சூழ்நிலை காரணமாக அனைத்துப் பொருட்களும் பன் மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் நாளொன்றுக்கு 3ஆயிரத்து 500 ரூபா தேவைப்படும் நிலையிலுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் ஆயிரம் ரூபா மட்டுமே. அதுவும் பல தோட்டத்தில் அரை நாள் வேதனமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

பல பகுதிகளில் பட்டினி இறப்பு அதிகரித்துள்ளது. இவ்வாறு நாடு செல்லும் வேளையில் நாட்டின் தலைவர் உடன் கவனம் செலுத்தி இலங்கை வாழ் மக்கள் நலன் கருதி மின் கட்டணம் மற்றும் பாடசாலை உபகரணங்கள், உணவு பொருட்கள் விலை குறைப்பு செய்வதுடன் குறித்த திகதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும்" - என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கந்தப்பளையில்....

(படங்கள் - சதுர்சன்)

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ரணில் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்தும் நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை கந்தப்பளை நகரில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவிடாமல் தடுப்பதன் மூலமும் பாராளுமன்றத்தில் சிறுபிள்ளைதனமாக கருத்துகளை முன்வைத்ததன் மூலமும் தனது அரசியல் வங்குரோத்து தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்'' என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தோர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களுடன் இணைந்து சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

''அத்தியாவசியப் பொருட்களின் விலை யேற்றம், மின்சாரம் கட்டண அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என்பன மக்கள் மீது தான்தோன்றித் தனமாக திணிக்கப்பட்டுவரும் நிலையில், மறுபுறத்தில் மக்களின் அங்கீகாரமில்லாத ரணில் அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை குழித்தோண்டி புதைத்து வருகிறது.

நானுஓயாவில் 103ஆவது தடவையாக அரங்கேறிய பொன்னர்சங்கர் கூத்து!

(செ.திவாகரன்)

நாகரீகம் வளர வளர தமிழர்களின் கலை, கலாசாரம் மறைந்து கொண்டு வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இதிலும் தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பொன்னர் சங்கர் கூத்து நாடகம் 103ஆவது தடவையாக நானுஓயா டெஸ்போட் தோட்டத்தில் இடம்பெற்றது.

இதில் பொன்னர், சங்கர் ஆகிய சகோதரர்களின் வாழ்க்கை வரலாற்றை நானுஓயா டெஸ்போட் தோட்டத்தைச் சேர்ந்தோர் பல்வேறு வேடங்களை தாங்கிவந்து பக்திபூர்வமாக ஆடினர்.

இவ்விழாவில் நானுஓயா, கிரிமிட்டி, கிலாரன்டன், கெல்லி, மாகாஎலிய, ரதல்ல உள்ளிட்ட பல்வேறு தோட்டப் பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த பொது மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.



தேசிய மக்கள் சக்தியினரால் யாழில் ஆர்ப்பாட்டம்

தேசிய மக்கள் சக்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் (25) காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

மின்சாரம், நீர், சமையல் எரிவாயு, உணவுகளின் விலைகளை அதிகரித்து மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டியடிக்கவும், தேர்தலை வென்றெடுக்கவுமே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிலாவரையில் புத்தர் சிலை அகற்றல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், நிலாவரைப் பகுதியில் காணப்பட்ட புத்தர் சிலை பிரதேச சபையின் தலையீட்டையடுத்து நேற்று முன்தினம் (25) அகற்றப்பட்டுள்ளது.

நிலாவரை கிணற்றடி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (24) இரவோடு இரவாக புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் காவல் கடமையில் நின்ற இராணுவத்தினரே அதனை அமைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், பிரதேச சபையின் தலையீட்டையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை பகல் அது அகற்றப்பட்டது.

யாழ். பல்கலையில் நான்கு மாணவர்களுக்கு வகுப்புத் தடை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை உட்பட பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைவார நிகழ்வுகளின்போது, மூன்றாம் வருட மாணவர்களால் இரண்டாம் வருட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் சுதந்திரமான – முறைசார்ந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஏதுவாக நான்கு பேருக்கும் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான விதிமுறைகளுக்கமைய கடந்த 23ஆம் திகதிமுதல் மறு அறிவித்தல் வரை விடுதி உட்பட பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கும், கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், பல்கலைக்கழகம் தொடர்புபட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கலைப் பீடாதிபதியின் உள்நுழைவுத் தடைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கலைவார நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மூன்றாம் வருட மாணவர்களுக்கும், இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றி, கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கைகலப்பாக மாறியுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது தலை மற்றும் தோள் பட்டைப் பகுதியில் உபாதைக்குள்ளான இரண்டாம் வருட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் நான்கு மாணவர்களுக்கும் சம்பந்தமிருப்பதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மாளியங்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைவாக கலைப் பீடாதிபதியினால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீட்கப்பட்ட காரிலிருந்து வாள்வெட்டுக் குழுவினர் அணிந்து வந்த உடைகள் மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸாரால் நாவற்குழி- கோவிலாக்கண்டி காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட காரிலிருந்து வாள்வெட்டுக் குழுவினர் அணிந்து வந்த உடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நாவற்குழி பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காரொன்றுக்கு கிபூ ஆர் இன்றி எரிபொருள் நிரப்ப மறுத்ததன் விளைவாக அன்றிரவே நிலைய ஊழியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய காரை பூட்டப்பட்ட நிலையில் காட்டுப்பகுதியிலிருந்து மீட்டிருந்தனர்.

அதன்பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவைப் பெற்று காரை உடைத்து சோதனை செய்தபோது வாள்வெட்டுக் குழுவினர் அணிந்து வந்த இரண்டு ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கார் மிகிந்தலை பகுதியைச் சேர்ந்தவருடையது எனத் தெரிய வருகின்றது.

கட்டைப்பிராயில் வீடு உடைத்து திருட்டு ; சந்தேகநபர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், இருபாலை, கட்டைப்பிராய் பகுதியில் வீடொன்றை உடைத்து 16 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி கட்டைப்பிராய் பகுதியிலுள்ள வீடொன்றில் உரிமையாளர்கள் இல்லாத நேரம் வீட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த 16 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இருவரை சந்தேகத்தில் கைதுசெய்து அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் களவாடப்பட்ட நகைகளை மீட்டுள்ளனர்.

இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும், போதைப்பொருட்களை வாங்குவதற்கான பணத்திற்காகவே களவில் ஈடுபட்டதாகவும் தமது விசாரணைகளில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'கலைமலர்' சஞ்சிகையின் பிரதிகள் இருப்பின் வழங்குமாறு கோரிக்கை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியிடப்பட்ட 'கலைமலர்' சஞ்சிகையின் பிரதிகள் இருப்பின் கலாசாலை நூலகத்திற்கு வழங்கி உதவுமாறு கலாசாலை அதிபர் கோரியுள்ளார்.

கலாசாலை நூற்றாண்டைக் காணும் தருணத்தில் கலாசாலையுடன் தொடர்புடைய வெளியீடுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த உதவியை மேற்கொள்ளுமாறு கலாசாலையில் கற்ற முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் அதிபர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

1923இற்கும் 1974இற்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பற்றிய தரவுகளோ அல்லது நூல்களோ கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும், அத்துடன், கலைமலர் 18, கலைமலர் 19 (1977 – 1978) கலைமலர் 22 (1981) கலைமலர் 28, கலைமலர் 29, கலைமலர் 30 (1990 – 1998 இடையில்) கலைமலர் 34 (2002) ஆகிய கலைமலர் சஞ்சிகைகள் கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர், இந்தப் பிரதிகள் எங்காவது இருப்பின் கலாசாலைக்கு (021 2230323 என்ற இலக்கத்திற்கு) அறியத்தந்தால் அவற்றை வந்து பெற்றுக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லுக்கு உரிய விலையும் விளைச்சலுமின்றி வீதியில் நிற்கும் மன்னார் விவசாயிகள்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக செய்கையின் அறுவடை தற்போது இடம் பெற்றுவருகின்ற நிலையில், ஏக்கருக்கு 30 மூடை விளைச்சல் கிடைத்த வயல்களில் இம்முறை 8-15 மூடைகளே விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, மாந்தை மேற்கு பகுதியிலுள்ள இலுப்பைகடவை, விடத்தல் தீவு, ஆட்காட்டிவெளி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குள் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் விளைச்சல் இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை மாந்தை பகுதியைச் சேர்ந்த 3,900 விவசாயிகள் 15,213 ஏக்கர் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், மஞ்சள் நோய்த்தாக்கம் போதியளவு நீர் உரிய நேரத்தில் கிடைக்காமை, கிருமிநாசினி, களைநாசினிகளின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் உரிய விளைச்சலின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏக்கருக்கு ஒன்றரை இலட்சத்துக்கும் மேல் செலவுசெய்து விவசாய செய்கையை மேற்கொண்ட நிலையில், ஏக்கருக்கு 50,000 குறைவான தொகையே கிடைத்துள்ளதாகவும் ஏக்கருக்கு ஒரு இலட்சத்துக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாந்தை பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை பிரச்சினை, உரிய நேரத்துக்கு பசளை கிடைக்காமை, மருந்து விலையேற்றம் என்பவற்றால் இம்முறை கடுமையாக விளைச்சல் குறைவடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

இம்முறை டீசல் விலை அதிகரிப்பு, பசளை விலை அதிகரிப்பு,கிருமிநாசினி விலை அதிகரிப்பு,வெட்டு கூலி அதிகரிப்பு, உழவு கூலி அதிகரிப்பு என அனைத்தும் விலையும் அதிகரித்துள்ள நிலையில் நெல்லின் விலை மாத்திரம் அதிகரிக்கப்படாமலும் நிர்ணயிக்கப்படாமலும் இருப்பதால் விவசாயத்தை விட்டுவிட்டு கூலித்தொழில் செய்யவேண்டிய நிலைக்கு தாங்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் கோவில்குளம் பகுதியில் விவசாய செய்கையை மேற்கொண்டுவரும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் உரப் பிரச்சினையால் ஏற்பட்ட நட்டத்துக்கே அரசாங்கம் உரிய நட்டஈடு வழங்காத நிலையில், இம்முறையாவது சம்பந்தபட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து விவசாயிகளைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென மன்னார் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரிலுள்ள பிரதேச செயலகங்களால் நெல் கொள்வனவு இடம்பெற்றாலும் கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவர்கள் நெல்லை கொள்வனவுசெய்வதால் விவசாயிகள் தனியார் கொள்வனவாளர்களினால் ஒவ்வொரு நாளும் நிர்ணயிக்கப்படுகின்ற குறைந்த விலைக்கே நெல்லை விற்பனை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

களப்பு ஆழப்படுத்தும் செயற்பாடுகள் ஆய்வுகளின்படி எந்தத் தரப்பினரையும் பாதிக்காதவாறு மேற்கொள்ளப்படும்

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

களப்பு ஆழப்படுத்தும் செயற்பாடுகள் உரிய ஆய்வுகளின் அடிப்படையில், எந்தத் தரப்பினரையும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும் - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நீர்கொழும்பு களப்பின் யக்கா வங்குவ எனும் பகுதியைப் பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

நீர்கொழுப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஆழ்கடல் மீன்பிடி கடற்றொழிலாளர்களின் கடல் போக்குவரத்துப் பாதையாக இருக்கின்ற நீர்கொழும்பு களப்பின் யக்கா வங்குவ பகுதியை புனரமைத்துத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, குறித்த பகுதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதனை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கருவாடு உற்பத்தி பாதிக்கப்படும் எனவும், அதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இன்னொரு தரப்பினால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்ததுடன், பிரதேச மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்து கொண்டார்.

யாழ். இளைஞருக்கு பிரான்ஸில் உயர் பதவி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கை தமிழ் இளைஞர் பிரான்ஸ் பொலிஸ் பிரிவில் முக்கிய பதவியில் இணைந்துள்ளார்.

பிரான்ஸில் தேசிய பொலிஸ் அதிகாரி டிப்ளோமா பட்டம் பெற்ற 175 பேருக்கான சான்றிதழ்களை உள்துறை அமைச்சர் வழங்கியுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கை தமிழ் இளைஞரான பெண்கலன் இதயசோதி தம்பதியினரின் மகனான பிராண்ட்போன்ட் காலன் பொலிஸ் அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் இவர் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி வீதிகளில் நெல் உலரவிடுவதனால் ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தரொருவர் பலி

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு வீதியில் கண்டாவளை சந்திக்கருகில் நேற்று (26) பிற்பகல் ஏற்பட்ட பாரவூர்தி - சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

நெல்லை வீதியில் உலர விடப்படும் நிலையில், அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், புளியம்பொக்கணை பகுதியிலிருந்து கண்டாவளை நோக்கி பயணித்த முதியவர் மீது பரந்தன் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த பாரவூர்தி மோதியுள்ளது.

இவ்விபத்தில் வட்டகச்சி பகுதியைச் சேர்ந்த கதிரவேலு யாதவராசா என்ற 58 வயதுடைய 6 பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பரந்தன் - பூநகரி வீதியிலும் நெல் உலரவிட்டதன் காரணமாக ஏற்பட்ட விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலியாகியிருந்தார். அத்தோடு, மேலும் சிலர் விபத்தினால் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, வாழைத்தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரியின் (தேசிய பாடசாலை) அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் தொடரான முயற்சியின் விளைவால் கல்லூரிக்கான காணி உறுதி அண்மையில் கொழும்பு பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

இஃதிஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் ஏற்பாட்டில் தலைமைத்துவப் பயிற்சி

(பீ.எம் முக்தார்)

இஃதிஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் ஏற்பாடுசெய்த தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் நேற்று முன்தினம் (25) பேருவளை மருதானை மனாரா ஹோட்டலில் நடைபெற்றது.

மேற்படி அமைப்பின் தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் டாக்டர் ரயீஸ் மீரா வளவாளராக கலந்துகொண்டார்.

பேருவளை பகுதியிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்கள், அரபு கல்லூரிகளில் பயிலும் உயர் வகுப்பு மாணவர்கள், அரபுக் கல்லூரிகளில் புதிதாக பட்டம் பெற்ற உலமாக்கள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் வாலிபர்கள் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.

தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் ஆரம்ப உரை நிகழ்த்தியதோடு இஃதிஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பின் நோக்கங்கள், செயற்றிட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தார். அமைப்பின் உதவிச் செயலாளர் திக்பி இஸ்மாயில், பொருளாளர் முஹம்மத் பாதில், நிர்வாக சபை உறுப்பினர் ரயீஸுல் முகத்தம் பர்ஸான் முர்ஸி, மௌலவி முஹம்மத் மில்லத் ஆலிம் ஆகியோரும் இங்கு உரை நிகழ்த்தினர்.

அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளரும் பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவருமான மௌலவி கலாநிதி அல் ஹாஜ் அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி), பேருவளை நியூஸ் குழுமத்தின் முக்கியஸ்தர் அல்ஹாஜ் ஜே.எம்.எம்.முஹம்மத் ஸாலிஹ், சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் உறுப்பினர்கள் உட்பட பலரும் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.

டாக்டர் ரயீஸ் மீரா தலைமைத்துவப் பண்புகள், இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள், பண்பாடுகள், முன்மாதிரிகள், இளைஞர்களின் எதிர்கால இலட்சியங்கள், இஸ்லாமிய தஃவா பணி, உலகக் கல்வி மற்றும் ஆன்மீகக் கல்வி தொடர்பில் இளைஞர்களுக்கு தெளிவாக விளக்கமளித்தார். மேற்படி அமைப்பு கடந்த 10 வருடங்களாக நாடளாவிய ரீதியில் இது போன்ற தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே பேருவளையில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளம் - மதுரங்குளி நகரில் ஆர்ப்பாட்டம்

(புத்தளம் நிருபர்)

மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளம் - மதுரங்குளி நகரில் நேற்று முன்தினம் (25) இரவு தீப்பந்தப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி ஏற்பாடுசெய்த குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டதில் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், தீப்பந்தம் ஏந்தி "விவசாயிகளின் வயிற்றில் அடிக்கதே", "மின் கட்டணத்தை உயர்த்தாதே" என இதுபோன்று பல கோஷங்களை எழுப்பினர்.

மேலும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, மக்கள் மீது வரிச்சுமையை திணிக்க வேண்டாம் என்றும் நாட்டை ஆட்சிசெய்ய முடியவில்லையென்றால் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டுக் கலாசாரத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் செயினுள் ஆப்தீன் மொஹமட் பைசாலுக்கு அண்மையில் கொழும்பு தெவட்டஹா பள்ளிவாசல் தலைவர் றியாஸ் சாலி, பலஸ்தீன் முன்னாள் தூதுவர் பௌசான் அன்வர், கொழும்பு பிரதி மேயர் எம்.ரீ.இக்பால் ஆகியோர்கள் இணைந்து தெவட்டஹா பள்ளிவாசலில் வைத்து கௌரவிப்பு நிகழ்வொன்றினை நடத்தினர். (அஷ்ரப் ஏ சமத்)

கற்பிட்டி – மணல்தோட்டம் பகுதியில் புதிய பள்ளிவாசல் திறந்துவைப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி - மணல்தோட்டம் பகுதியில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ள முபீன் மஸ்ஜித் கடந்த வெள்ளிக்கிழமை (24) ஜூம்ஆ தொழுகையுடன் திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது, கணமூலை உம்முல் பழ்ல் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர், நல்லாந்தளுவ ஜூம்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அல்ஹாபிழ் ஏ.ஏ.முஜிபுர் ரஹ்மான் மனாரி முதலாவது ஜூம்ஆ உரையை நிகழ்த்தினார்.

டுபாயிலுள்ள மஸ்ஜித் ஒன்றில் பேஷ் இமாமாக கடமையாற்றும் கலீலுர் ரஹ்மான் மௌலவி மற்றும் வெளிநாட்டில் வாழும் கற்பிட்டி நலன்விரும்பிகள் உள்ளிட்டோரின் நிதி உதவியில் இந்த மஸ்ஜித் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குறித்த மஸ்ஜித் திறப்புவிழா நிகழ்வில் உலமாக்கள் உட்பட பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் 44 கிலோ கேரள கஞ்சா மீட்பு



நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது இலங்கை கடற்படையினர் 44 கிலோ கிராம் (ஈரமான எடை) கேரள கஞ்சாவை கைப்பற்றினர்.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையின்போது நெடுந்தீவுக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் மிதந்துகொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான பயணப்பொதியை மீட்டனர்.

அதனை சோதனையிட்டபோது அதிலிருந்து 44 கிலோ 202 கிராம் (ஈரமான எடை) எடையுள்ள கேரள கஞ்சா நிரப்பப்பட்ட 14 பொதிகள் மீட்கப்பட்டன.

குறித்த கேரள கஞ்சா சுமார் 14 மில்லியன் பெறுமதியானவையென கடற்படையினர் தெரிவிக்கின்றனர். கடற்படையினரின் சுற்றிவளைப்பால் கடத்தல்காரர்கள் கேரள கஞ்சாவை கரைக்குக் கொண்டுவர முடியாமல் விட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர். இதேவேளை, கேரள கஞ்சா கையிருப்பு சட்ட நடவடிக்கைகளுக்காக ஆஜர்படுத்தப்படும் வரை கடற்படையினரின் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு சேவை செய்யாவிட்டால் மாவட்டத்தை விட்டு வெளியேறுங்கள்!

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கறார்

(கல்லடி செய்தியாளர்)

கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தில் மக்கள் பல இழப்புகளைச் சந்தித்திருக்கின்றனர். அத்தோடு, பல்வேறு வகையிலான வேதனைகளையும் மக்கள் தினம் தினம் சுமந்துகொண்டிருக்கின்றனர். மாவட்ட செயலகமும், பிரதேச செயலகமும் மக்களுக்கு சேவை செய்வதாக இருக்கவேண்டும். மக்களுக்கு சேவை செய்யாவிட்டால் நீங்களாக இந்த மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் வெளியேற்றுவோம் - என்று வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மகிழடித்தீவில் சனிக்கிழமை (25) இடம்பெற்ற தோ்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புதிதாக வந்த அரசாங்க அதிபரை நான் இதுவரை சந்திக்கவில்லை. வரவேற்கின்றேன். வாழ்த்துகின்றேன். எங்களது பலமிய போராட்டங்களை நீங்கள் பார்க்கவில்லை. மேலும், தெரியாவிட்டால் ஊடகங்கள் வாயிலாக தேடிப்

பாருங்கள். நாங்கள் பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறோம். உங்களுக்குத் தெரியாவிட்டால் இணையத்தில் போய் தேடிப் பாருங்கள். இன்று இதுதான் மாவட்டத்தின் நிலைவரம்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு வாய் இருந்தால் உண்மையைச் சொல்லும். மாதக்கணக்கில் வீதியில் படுத்துக் கிடந்த நாங்கள் கச்சேரியை இழுத்து மூடி மாதக்கணக்கில் வீதியில் படுப்போம். அன்மையில் எனது பிரத்தியேகச் செயலாளர் எமது மாவட்ட மக்களது வாழ்வாதார உதவித் திட்டத்தை எனது அமைச்சின் ஊடாக செய்வதற்கான அனுமதிக் கடிதத்தை மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெறச் சென்றுள்ளார். இதன்போது, 2015ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற என்னை, எனது செயலாளரிடம் அப்போது உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் என்ன அமைச்சர் என்றும் வினவியுள்ளார். மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் என்ன அமைச்சர் என்று தெரியாத நிலையிலுள்ளார். அப்போது என்னுடைய செயலாளர் அவருக்கு கூறியிருக்கின்றார். இன்று எந்த அரச அலுவலகங்களாக இருந்தாலும் எமது மக்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்கள் நடைபெற வேண்டும். அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். மக்களுக்காகத்தான் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், அரசாங்க அதிபர், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள். அதை யாரும் மறந்து விடக்கூடாது.

மக்களுக்கு சேவை செய்ய முடியாவிட்டால் மாவட்டத்தை விட்டு நீங்கள் வெளியேறலாம். உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் - என்றார்.

யானைகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பது தொடர்பான கலந்துரையாடல்!

(சம்மாந்துறை, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

சம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பது தொடர்பான கலந்துரையாடல், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிரின் வேண்டுகோளுக்கினங்க, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஏ.டீ.சுமித் தலைமையில் வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வனவிலங்கு பாதுகாப்புத் துறைக்கான உதவிப் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள், அனாத்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். தற்போது சம்மாந்துறையில் யானைகளால் விவசாயிகளுக்கு இடம்பெறும் தாக்குதல் மற்றும் வயல்கள் நட்டமடைவதை தவிர்ப்பதற்காக இக்கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வனவிலங்கு பாதுகாப்புச் செயலணியும் சிவில் பாதுகாப்புப் படையும் இணைந்து பாதுகாப்பு வயல்நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்தவதோடு குறித்த தனி யானையை இனங்கண்டு அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு ஏற்றிச் செல்லுதல் மற்றும் நீண்டகால பாதுகாப்புத் திட்டத்தை தீர்மானித்து நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான தரவுகளைச் சேகரித்து நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஜயம்

(அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றை வெள்ளிக்கிழமை(24) மேற்கொண்டிருந்தார். குறித்த விஜயத்தின்போது அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையின் செயற்பாடுகளைக் கண்காணித்ததுடன், குறித்த வைத்தியசாலையில் அமைய்பெறவுள்ள புனர்வாழ்வு நிலையம் தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ. வாஜித் பங்கு கொண்டதுடன் வைத்திய சாலையின் செயற்பாடுகள் மற்றும் வைத்தியசாலைக்கு மிக முக்கிய தேவையான வளங்கள் பற்றியும் தெளிவுபடுத்தினார். இந்த விஜயத்தின்போது கிழக்கு மாகாண ஆளுநரின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கஞ்சாவுடன் பெண் கைது

(பாறுக் ஷிஹான்)

கஞ்சாவை சூட்சுமமாக பதுக்கி விற்பனை செய்துவந்த சந்தேக நபரான 40 வயதுடைய பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் சங்கமுரம் கிராமத்தில் வைத்தே குறித்த சந்தேக நபரான பெண் சனிக்கிழமை (25) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மல்வத்தை விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபரிடமிருந்து 800 கிராம் நாட்டு கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

வவுணதீவில் ஒரே நாளில் இருவர் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்டூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்காடு மற்றும் பாவக்கொடிச்சேனை பிரதேசங்களில் இரு குடும்பஸ்தர்கள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

பழங்குடிமடு, பாவக்கொடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சந்திரன் (வயது 44) மற்றும் விளாவெட்டுவான், நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை சாரங்கமணி (வயது 54) என்பவர்களே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலங்களாக சனிக்கிழமை (25) மீட்கப்பட்டவர்களாவர்.

கந்தையா சந்திரன் என்பவர் சம்பவ தினத்தன்று மதுபானம் அருந்திவிட்டு மனைவி மற்றும் பிள்ளைகளுடன் ஏற்பட்ட தகராறினால் தனது மனைவியைத் தூக்கிவிட்டு வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அயலில் கட்டப்பட்டிருந்த வீட்டின் அறையினுள் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சின்னத்துரை சாரங்கமணி என்பவர் நீண்ட காலமாக சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நிலையில், சம்பவ தினத்தன்று அவரின் வீட்டார் உறவினர் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பியபோது வீட்டின் அறையினுள் தூக்கிட்டுத் தற்கொலை செய்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு பிரதேச திடீர் மரணம் விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு பரிந்துரைத்தார். மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இடமாற்றம் பெற்றுச்சென்ற கடற்படைச் சிப்பாய் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை கடற்படை முகாமிலிருந்து இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கடற்படைச் சிப்பாய் திடீரென உயிரிழந்த சம்பவமொன்று சனிக்கிழமை (25) இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது தெஞ்சுவலி ஏற்பட்டுள்ள நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனையடுத்து குறித்த கடற்படைச் சிப்பாய் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் பொலன்னறுவை - தியபெலும, அலிகிம்புலவ பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.சனித்ரத்னாயக்க (34 வயது) ஆவார். உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகள் முடிவுற்ற பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாக திருகோணமலை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

ரயிலுடன் மோதி நபரொருவர் பலி

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை, தாளாடி கட்டைப்பகுதியில் ரயிலுடன் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ரயிலுடன் திருகோணமலை - கண்டி வீதி, 05ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த எஸ்.எச்.பிரசன்ன பிரதீப் குமார (48 வயது) என்பவர் மோதி சனிக்கிழமை (25) உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருக்கு சிறுநீரக நோய் போன்ற நோய்கள் காணப்பட்டதாகவும் இதனால் மன உளைச்சலுக்குள்ளான அவர், ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

லேகியம் எனும் போர்வையில் போதைப்பொருள் விற்பனை

73 வயது சந்தேக நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

லேகியம் எனும் போர்வையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 73 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரை நிந்தவூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக லேகியம் எனும் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக சனிக்கிழமை மாலை நிந்தவூர் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீமின் ஆலோசனையின் கீழ் சிறுகுற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன, பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்ட நடவடிக்கையினால் சுமார் 50இற்கும் மேற்பட்ட லேகியம் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. சான்றுப் பொருட்களுடன் சந்தேக நபர் சட்ட நடவடிக்கைகாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நிந்தவூர் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான செயலமர்வு

(அட்டாளைச்சேனை மத்திய, ஆலையடிவேம்பு செய்தியாளர்கள்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் இளம் வேட்பாளர்களை அறிவூறுத்தும் செயலமர்வு அக்கரைப்பற்று தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது.

பெல்ரல் அமைப்பின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின் இணையத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் பிரதான கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் இம்முறை போட்டியிடும் இளம் வேட்பாளர்கள், சமயத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது, உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வகிபாகம், அதன் தொழிற்பாடுகள், ஜனநாயக ஒழுக்க விழுமியங்கள் மற்றும் தேர்தல் பிரசார சேவை உள்ளிட்ட தலைப்புகளில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விரிவுரைகள் இடம்பெற்றன. அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின் இணையத்தின் தவிசாளரும் பெல்ரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளருமான வி.பரம சிங்கத்தின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வின் வளவாளர்களாக ஆ.சொர்ணலிங்கம், சட்ட ஆலோசகர் செல்வராஜா துஷ்யந்தன், திட்ட முகாமையாளர் பிரசன்யா பாக்கியசெல்வம், திட்ட அலுவலர் சங்கரி சுப்ரமணியம், உதவி திட்ட அலுவலர் சுரேக்கா பிரியதர்ஷனி ஆகியோரால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

போதையூட்டும் குளிசைகளை விற்பனைசெய்த நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

பாதணி விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றி தொலைபேசி ஊடாக சூட்சுமமாக போதையூட்டும் குளிசைகளை விற்பனை செய்த சந்தேகநபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை நகரப் பகுதியில் பிரபல பாதணிகள் விற்பனை செய்கின்ற கடையில் பணியாற்றும் நபர் போதைப்பொருள் குளிசைகளை விநியோகிப்பதாக கல்முனை விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சனிக்கிழமை மாலை தேடுதல் மேற்கொண்டு குறித்த கடையில் பணியாற்றிய மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்தேக நபரை கைது செய்ததுடன் சந்தேக நபரது உடமையில் இருந்து 100 போதைக் குளிசைகள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நீண்டகாலமாக போதைக் குளிசைகளை தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்டு விநியோகித்து வந்துள்ளமை விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தவிர, கைதான பின்னர் சந்தேக நபருக்கு போதைக் குளிசை விற்பனை தொடர்பாக பல தொலைபேசி தொடர்புகள் வந்தவண்ணம் இருந்தன. இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய பொலிஸ் குழுவினர் இந்தநடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்களுடன் கல்முனை தலைமையகப் பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கஞ்சாவுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி, பொலிஸ் பரிசோதகர் பகிதர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

காதியார் வீதியில் கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 2000 மில்லி கிராம் கஞ்சாவும், ஹிஜ்ரா வீதியில் கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 2000 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா முன்னிலையில் வெள்ளிக்கிழமை (24) ஆஜர்படுத்தியபோது மார்ச் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விவாதப் போட்டியில் மண்முனைப்பற்று இரண்டாமிடம்

(காத்தான்குடி செய்தியாளர்)

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கிடையிலான விவாதப் போட்டியில் மண்முனைப்பற்று பிரதேச சபை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

2022ஆம் ஆண்டுக்கான நாடுதழுவிய ரீதியில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் தமிழ்ப்பேசும் 63 உள்ளூராட்சி மன்றங்கள் பங்குபெற்றிருந்தன. இதில் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மண்முனைப்பற்று பிரதேச சபை மற்றும் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப் பட்ட கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கும் இடையிலான இறுதி விவாதப் போட்டி சனிக்கிழமை (25) Hotel Ramada இல் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மண்முனைப்பற்று பிரதேச சபை ஒரிரு புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

ஒன்றிணைந்து கல்விசார் உதவிகளை வழங்கிய டயலொக், இலங்கை விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டட்



அண்மையில், டயலொக் அகிஅட்டா பிஎல்சி நிறுவனம், இலங்கை விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டட் ஆகியனவற்றுடன் இணைந்து திருகோணமலை, கன்னியாவில் அமைந்துள்ள இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தின் கணினி ஆய்வுகூடத்தை மறுசீரமைத்து மேம்படுத்தும் நோக்கில் பாடசாலைக்கு டிஜிட்டல் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. ததகுவாய்ந்த இந்நோக்கமானது இலங்கை விமானப்படைத் தளபதி (SLAF) மற்றும் டயலொக் அகிஅட்டா பிஎல்சி குழும தலைமை நிர்வாக அதிகாரி அகியோரின் வழிநடத்துதலின்கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தொழில்நுட்பத்துடன் கூடிய படைப்பாற்றலை கொண்டதான முழுதாக சொருகக்கூடிய Magicbit Pro அலகுகள் மற்றும் உணர்திறன் தொகுதிகளை டயலொக் வழங்கியது. Magicbit என்பது இன்டர்நெட் ஒவ் திங்ஸ் (IoT), ரொபோடிக்ஸ் (Robotics) இலக்ட்ரோனிக்ஸ் (Electronics) மற்றும் புரோகிரேமிங் (Programming) ஆகியவற்றிற்காக உருவாக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்புத் தளம் மற்றும் STEM கருவியாகும். பெப்ரவரி, மேலும் நெனச டிவி (Nenasa TV) வசதியையும், முழுதாக கட்டணம் செலுத்தப்பட்ட மாணவர் புரோட்பேண்ட் (broadband) வசதிகளை வழங்குவதான உறுதிமொழியையும் வழங்கியது. நெனச ரிவி என்பது கல்வி அமைச்சுடன் கூடிய அரச – தனியார் கூட்டு முயற்சியிலானதொரு தொலைக்காட்சி சேவையாகும்.

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தனித்தனியாக எட்டு அலைவரிசைகள் உடாக தரம் 1 தொடக்கம் 13 வரையிலான மாணவர்களுக்கு இதனூடே திகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. ஒவ்வொரு அலைவரிசையிலும் ஒளிபரப்பப்படுகின்ற சகல உள்ளடக்கங்களும் கல்வி அமைச்சினால் வழங்கப்படுவதுடன், அவை கல்வி அமைச்சின் தீவிர கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்படுகின்றன.

சிறப்புடன் நிறைவுற்ற கலாபொல

இலங்கையின் வருடாந்த திறந்தவெளி கலைக் கண்காட்சியான கலா பொல 2023, கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி இடம்பெற்றதோடு, இவ்வருடம் தனது 30ஆவது ஆண்டு நிறைவையும் அது கொண்டாடியது. ஜோர்ஜ் கீத் அறக்கட்டளையினால் (George Keyt Foundation) கருத்தாக்கம் பெற்ற இந்த திறந்தவெளி கலைக் கண்காட்சி, முதன்முதலில் 1993இல் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1994 முதல் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தொடர்சியான ஆதரவுடனும் அனுசரணையுடனும் இடம்பெற்று வருகின்றது. கலா பொல என்பது, கலைஞர்கள் தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தவும் கலைஞர் சமூகத்துடன் தொடர்பு ஏற்படுத்தவுமான, இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் துடிப்பான தளமாகும். அந்தவகையில் இந்நிகழ்வில், நாடு முழுவதிலுமிருந்து 300 உள்ளூர் கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்ரீடன்ஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோயல் நர்சிங் ஹோம் நிறுவனத்தின் 100 ஊழியர்களுக்கு GN125 வகை 100 மோட்டார்சைக்கிள்கள்

நாட்டின் மிகப் பெரிய சுகாதார சேவைகள் நிறுவனமான வரையறுக்கப்பட்ட ரோயல் நர்சிங் ஹோம் தனியார் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற 800 ஊழியர்களில் இரண்டு அண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்டுள்ள தெரிவு'செய்யப்பட்ட 100 ஊழியர்களுக்கு தமது போக்குவரத்து பணிகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதி அளிக்கும் வகையில் நிறுவனத்தின் செலவில் 100 மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 35% உதிரிப்பாகங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள SENARO GN125 வகை மோட்டார்சைக்கிள்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வின்போது அதே நாளன்று மேற்படி SENARO GN125 வகை 100 மோட்டார் சைக்கிள்களை கொள்வனவுசெய்து தமது ஊழியர்களுக்கு வழங்கும் பணியை ரோயல் நர்சிங் ஹோம் தனியார் நிறுவனத்தின் அதிபர் மனுஜ ஹேவாவசம் மேற்கொண்டார். மேற்படி நிகழ்வு கொழும்பு சினமன் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றதோடு, அந்நிகழ்வில் சினாரா மோட்டார்ஸ் நிறுவனத்தின் அதிபர் ரோஹன வடுகே, கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் நீதித்துறை அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். இங்கு கருத்து தெரிவித்த ரோயல் நர்சிங் ஹோம் நிறுவனத்தின் அதிபர் மனுஜ ஹேவாவசம் உள்நாட்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்குமாக மூன்று அண்டுகளுக்கு மேற்பட்ட உத்தரவாதச் சான்றிதழை அளிக்கும் இவ்வாறான உயர் தரத்திலான உள்நாட்டு உற்பத்திகளைக் கொள்வனவு செய்யவேண்டியது சகல பிரஜைகளினதும் கடமை என தெரிவித்தார்.

ஹொரணையில் உத்தியோகபூர்வமாக புதிய தொழிற்சாலையை தொடங்கிவைத்த Sunquick

சன்குயிக் லங்கா (பிரைவேட்) லிமிட்டட், சன்குயிக் BiBi ரெடி-டு-டிரிங்க் (RTD) பான உற்பத்திக்காக நவீன தொழில்நுட்பங்களுடன் அமைந்த அதன் தொழிற்சாலையை 2023 பெப்ரவரி 23ஆம் திகதி ஹொரணையில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தது.

இந்நிகழ்வில் CO-RO A/S டென்மார்க், தலைவர் சோரன் ஹோல்ம் ஜென்சன் மற்றும் சன்குயிக் லங்கா தலைவர் ஹேமகா அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

சன்குயிக் புதிய தொழிற்சாலையின் உத்தியோகபூர்வ திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றிய CO-RO A/S தலைவர் சோரன் ஹோல்ம் ஜென்சன், "இந்த RTD உற்பத்தி வசதியை அறிமுகப்படுத்தியதன் மூலம் சன்குயிக் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் வளர்ச்சியின் புதிய கட்டத்திற்குள் நுழைகிறது. தனித்துவமான சுவை மற்றும் தரத்துடன், பல தசாப்தங்களாக குடும்பங்களையும் நண்பர்களையும் ஒன்றிணைக்கும் வியாபாரக்குறியாக Sunquick இருந்துவருகிறது. எங்கள் நுகர்வோருக்கு சிறந்ததை வழங்குவதற்கான வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான மேலும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக இதைக் கருதுகின்றோம்" எனக் கூறினார்.

சன்குயிக் லங்கா தனது உற்பத்திப் பலத்தை மேம்படுத்தி மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பதில் செயல்திலையில் பங்கு வகிக்கின்றது. Sunquick இலங்கையில் பழ ஸ்குவாஷ் பிரிவில் 70% சந்தைப் பங்கை வகிக்கின்றது. அதன் தயாரிப்புகளை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியுகினியா, பிஜி, மாலைதீவு, தாய்வான் மற்றும் பங்களாதேஷ் உட்பட பெரும்பாலான ஆசிய – பசிபிக் பிராந்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இலங்கையில் IATF 16949 சான்றிதழ் வென்ற முதலாவது ரயர் உற்பத்தியாளர்கள் சியெட்

இலங்கையின் முதலாவது ரயர் உற்பத்தி நிறுவனம் என்ற பெருமையும் இதன் மூலம் கிடைத்துள்ளது.

சியெட் களனி இன்டர்நேஷனல் ரயர் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், சியெட் களனி ரேடியல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், அஸோஸியேட்ட் சியெட் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆகிய உற்பத்தி வளாகங்களுக்கு கிடைத்துள்ள இந்தச் சான்றிதழில் சியெட் களனி தலைமையகம் சியெட் R&D இந்தியா என்பன இந்த உற்பத்தி வளாகங்களுக்கு ஆதரவு வழங்கும் இடங்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சியெட் களனி ஹோல்டிங்ஸின் மூன்று உற்பத்தி வளாகங்களுக்கு IATF 16949 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. சியெட்டின் உற்பத்திகள் பிரத்தியேகமான அதியுயர் தரத்தைக் கொண்டுள்ளன என்பதையும், அதன் விநியோகத் தொடர் ஆற்றல்மிக்கதாக உள்ளது என்பதையும் உறுதிசெய்யும் வகையில் இது அமைந்துள்ளது. இந்த சர்வதேச கீர்த்திமிக்க தரச்சான்றிதழை வென்ற

GLO ஜுஸ் ஆண்டின் வேகமாக வளர்ந்துவரும் வர்த்தக நாமம் விருதை வென்றது

டேவிட் பீரிஸ் குழும கம்பனிகளின் உணவு மற்றும் விவசாயப் பிரிவாக விளங்கும் டி.பி

குளோபல் வெஞ்சர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்தினால் உற்பத்திசெய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படும் GLO ஜுஸ், கீல்ஸ் விநியோகஸ்தர்கள் மாநாட்டில் நடைபெற்ற பங்குதாரர் சக்தி 2023 விருது வழங்கும் நிகழ்வில் 2022/23 ஆம் ஆண்டின் வேகமாக வளர்ந்துவரும் வர்த்தக நாமம் விருதை வெற்றிகொண்டது.

ஒட்டுமொத்த குடிபான சந்தையில் 8% சந்தைப் பங்கையும், இந்தக் காலப் பகுதியில் ஜுஸ் பிரிவில் 80% விற்பனை வளர்ச்சியுடன் அதிகமான சந்தைப் பங்கையும் கொண்டுள்ள GLO ஜுவிற்கே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் விவசாய சமூகத்தினருடன் தைப்பொங்கலை கொண்டாடிய பெல்வத்தை

இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமங்களில் ஒன்றான பெல்வத்தை (Pelwatte Dairy) நிறுவனம், அண்மையில் தமிழ் விவசாய சமூகத்திற்கு உதவிகளை வழங்கி, தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தது. தமிழ் மக்கள் கொண்டாடும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்று எனும் வகையில், இவ்விவசாயிகளுடன் வலுவான மற்றும் அர்த்தமுள்ள உறவுகளைக் கட்டியெழுப்பவும் அதனைத் தொடர்சியாக பேணும் வகையிலும் பெல்வத்தை நிறுவனம் இப்பண்டிகையை தொடர்ச்சியாகக் கொண்டாடி வருகிறது.

அந்தவகையில் இவ்வருடம் தைப்பொங்கலைக் கொண்டாடும் விவசாயிகளுக்கு பெல்வத்தை நிறுவனம் சுமார் 2,000 பரிசுப் பொதிகளை வழங்கியது. இப்பரிசுப் பொதியில் பாற்பரிய தைப்பொங்கல் பானைகள், அரிசி, சீனி, தேங்காய், கருப்பட்டி, போஞ்சி, ஊதுபத்தி குச்சிகள் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன. இக்கொண்டாட்ட நிகழ்வின் ஒரு பகுதியாக பெல்வத்தை நிறுவனத்தின் பிராந்திய மற்றும் கள உத்தியோகத்தர்களும் அங்கம் வகித்தனர்தோடு, இப்பொருட்களை அவர்கள் பால் விவசாயிகளது வீடுகளுக்குக் கொண்டுசேர்த்தனர்.

பெல்வத்தை நிறுவனத்தின் தலைவர் அரியசீல விக்ரமநாயக்க, இக்கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயிகளுடன் கலாசார ரீதியாகவும் சமய ரீதியாகவும் தொடர்பைப் பேணுவதில் நாம் மிகவும் மகிழ்சியடைகிறோம். இவ்வாறான கொண்டாட்டங்களின்போது, ஒவ்வொரு விவசாயிகளுடனும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும், அவர்களின் உற்பத்தி செயன்முறை குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும், பல வருடங்களாக அவர்கள் வழங்கிவரும் பங்களிப்பு மற்றும் அதரவுக்காக எமது நன்றியைத் தெரிவிக்கவும் முடிந்துள்ளது – என்றார்.

காலநிலை நிதிப் பரிமாற்றத்தை மேற்கொண்ட தெற்காசிய வங்கியாக கொமர்ஷல் வங்கி மீண்டும் தெரிவு

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) கொமர்ஷல் வங்கிக்கு மீண்டும் ஒரு தடவை 2022ஆம் வருட நிதி ஆண்டில் ஆக்கக்கூறுகளான அளவு காலநிலை நிதிப் பரிமாற்றத்தை செய்த தெற்காசிய வங்கி என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது. இலங்கையின் தலைசிறந்த தனியார்துறை வங்கிக்கு 2022ஆம் ஆண்டுக்கான நிதி நிறுவனங்களுக்கான காலநிலை மதிப்பீட்டு விருது (CAFI) என்ற கீர்த்திமிக்க விருது வழங்கப்பட்டுள்ளது.

314 காலநிலை பரிமாற்றங்களை வெற்றிகரமாக செய்தமைக்காக காலநிலை அறிக்கையிடலுக்கான CAFI விருது கொமர்ஷல் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது IFCஇன் காலநிலை வகைப்படுத்தல் தகுதிக்கு உரியதாகும். காலநிலை தகுதிக்கான மதிப்பீட்டுக் கருவி மற்றும் முதலீடுகளின் காலநிலைத் தாக்கம் என்பனவற்றுக்கான அளவீட்டுக் கருவி என்பன இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விருதை வென்ற ஒரேயொரு இலங்கை வங்கியான கொமர்ஷல் வங்கி, 2021ஆம் ஆண்டிலும் இதே விருதை வென்றுள்ளதை குறிப்பிடத்தக்கதாகும். வங்கியின் பச்சைவீட்டு வாயுக் குறைப்பு (CHG) காரணமாக ஏற்பட்ட காலநிலைத் தாக்கத்தையும் அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது.

உணவுப் பாதுகாப்பற்ற இல்லங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் SOS சிறுவர் கிராமங்கள் மனிதநேய உதவி நிகழ்ச்சி முன்னெடுப்பு

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியான சூழலில், இலங்கையின் பல பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்கள் மந்த போஷணை, கல்வியை இடைநிறுத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான இதர பிரச்சினைகள் தொடர்பில் பல அறிக்கைகள் வெளியாகி உறுதிசெய்துள்ளன. இதன் காரணமாக, சிறுவர்கள் தமது குடும்பத்திலிருந்து பிரிக்கப்படும் நிலைகளும் எழுந்துள்ளன.

சிறுவர்களின் உரிமைகளுக்காக இயங்கும் சிறுவர் நலன்புரி நிறுவனமாகத் திகழும் இலங்கை SOS சிறுவர் கிராமங்கள் (SOSCV SL) இந்த நிலையை புரிந்துகொண்டு, தனித்தனி சிறுவர் – உணவு, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் மனிதநேய உதவித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

மனிதநேய உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கமாக SOSCV SL காணப்படும் ஒன்பது மாவட்டங்களின் பிரதேச செயலகங்களுடன் SOSCV SL இயங்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பங்காளர் நிறுவனங்களின் ஆதரவுடன், குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களின் தேவைகளைக்கொண்ட சிறுவர்களை இனங்கண்டு, அவசியமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. மேலும், சகல சர்வதேச நன்கொடைகளையும் மனிதநேய உதவி நிகழ்ச்சித் திட்டத்துக்கு வழங்க SOSCV SL தீர்மானித்துள்ளதுடன், அதனூடாக நாடு முழுவதையும் சேர்ந்த 10,000இற்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் 3,000இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்பெறுவர்.

2023 டிசம்பர் மாதம் வரையில் தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கு உதவும் பணிகளை இலங்கை SOS சிறுவர் கிராமங்களினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன், தேவையெனில் நாட்டின் ஏழ்நிலைக்கமைய இந்தக் காலப்பகுதியை மேலும் நீடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், SOSCV SLஇனால் குடும்பங்களின் பிரதான பராமரிப்பாளர்களுக்கு அவசியமான தொழிற்பயிற்சித் திறன்களை வழங்கி, தொழில்வாய்ப்பைப் பெற அல்லது சுயதொழிலில் ஈடுபட வாய்ப்பை ஏற்படுத்தி, தமது குடும்பங்களுக்கு அவசிய வருமானமீட்டலைப் பெறவும், இலங்கையில் உணவுப் பாதுகாப்பு இடரை தணிப்பதில் பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்த்துள்ளது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilanbusiness@gmail.com

இரத்மலானையில் இரண்டாவது Green Mart நிலையத்தை திறந்துவைத்த Hameedia

தரம் மற்றும் ஸ்டைலுக்கு பெயர்பெற்றதும் ஆடவர் அணிகலன்களுக்கு இலங்கையில் முன்னணி வகிப்பதுமான Hameedia, இலங்கையின் மளிகைப் பொருட்களை கொள்வனவுசெய்திடும் அனுபவத்தில் தொடர்ந்தும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில் இரண்டாவது Green Mart மளிகைப் பொருட்கள் விற்பனை நிலையத்தை இரத்மலானையில் இல. 271, காலி வீதி, இரத்மலானை என்ற முகவரியில் திறந்துவைத்தது.

Green Mart நிலையத்தின் உத்தியோகபூர்வ திறப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக Diamond Best Food of Companiesஇன் தலைவரான பௌமி ஜிஸ்டி மற்றும் இலங்கையின் பதக்கம் வென்ற நீச்சல் சம்பியனான ஜூலியன் போலிங் ஆகியோர் கலந்துகொண்டனர். Hameedia's முகாமைத்துவப் பணிப்பாளர் பவுசுல் ஹமீத், பிரதம நிறைவேற்று அதிகாரி நிரோஷன் டி சில்வா மற்றும் தலைவர் ரிஸ்வி ஸஹீத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கொவிட் -19 பெருந்தொற்று மற்றும் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, மலிவு விலையில் உணவு வாங்குவதும் அதை இலகுவாக பெற்றுக்கொள்வதும் மக்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக மாறியுள்ளது. இந்நிலைமையை எளிதாக்கிடும் வகையில் Hameedia, கடந்த வருடம் இரத்மலானையில் முதரலாவது Green Martஇனை ஆரம்பித்து அதனை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சமூகங்கள் பல்வேறு வகையான உணவு மற்றும் பானங்களை இலகுவாக பெற்றுக்கொள்ள வழிவகுத்தது.

Green Martஆனது மளிகைப் பொருட்கள் விற்கப்படும் ஒரு விற்பனை நிலையமாகும். இது இரத்மலானை மற்றும் அதற்கு அண்டிய பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதும், அதற்கு பெறுமதி சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது. நிலைத்திருக்கக்கூடிய, வினைத்திறன்மிக்க, மலிவு விலையில் மற்றும் சமூகத்துக்கு மீளப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையிலான தீர்வையும் வழங்குகின்றது. இது Hameedia குழுமத்தின் My Friend Foundation எனும் அறக்கட்டளையின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

Green Martஆனது நுகர்வோருக்குப் பாரிய தெரிவுகளிலான உணவு மற்றும் குடிபான வகைகளை வழங்குகின்றது. அவை, புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள், குளிரூட்டப்பட்ட உணவு வகைகள், சிற்றுண்டிகள், தின்பண்டங்கள், பஸ்தா மற்றும் சோஸ் வகைகள், ஜாம் மற்றும் அதைச் சார்ந்த ஏனைய உண்ணக்கூடிய உணவு வகைகள், இனிப்பு உணவு வகைகள், பால் தயாரிப்புகள், மளிகைப் பொருட்கள், சுவையூட்டிகள் என மேலும் பலவற்றை தம்மகத்தே கொண்டுள்ளது.

இரண்டு புதிய Home Broadband முற்கொடுப்பனவு பிளான்களை அறிமுகப்படுத்தும் Dialog

இலங்கையின் முதன்மையான தொலைத்தொடர்பு டேட்டா பிளான்கள் வழங்குனரான டயலொக் ஆசியாட்டா பிஎல்சியின் துணை நிறுவனமான டயலொக் புரோட்பேண்ட் நெட்வொர்க்கானது, இலங்கையர் அனைவருக்கும் மிகவும் குறைந்த மற்றும் கட்டுப்படியான, உலகத் தரம் வாய்ந்த இணைய சேவைகளை வழங்கும் நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, இரண்டு புதிய Home Broadband முற்கொடுப்பனவு பிளான்களை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

இப்போது வாடிக்கையாளர்கள் மிகக் குறைந்த கட்டணங்களை செலுத்தி டேட்டாவைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனடிப்படையில், 10GB Anytime டேட்டா பிளான் (14 நாட்களுக்கு செல்லுபடியாகும்) ரூ. 299இற்கும், 20GB Anytime டேட்டா பிளான் (30 நாட்களுக்கும் செல்லுபடியாகும்) ரூ. 540இற்கும் வழங்கப்படும். இந்த முற்கொடுப்பனவு பிளான்களானவை டயலொக் ஹோம் புரோட்பேண்ட் வழங்கும் சலுகைகளின் அளவை மென்மேலும் அதிகரிக்கின்றதோடு, முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் தங்கள் பயன்பாட்டுத் தேவைகளுக்கேற்ப இலகுவான ரீலோட் மூலம் தமக்கு உகந்த திட்டங்களைச் செயற்படுத்தவும் உதவுகிறது.

தொழில்முயற்சியாளராக 30 ஆண்டுகளை பூர்த்திசெய்யும் அமாமி ஸ்தாபகர் ரணில் டி சில்வா

சுற்றுலா ஹோட்டல்கள் சார்ந்த சேவைகளுக்கான சுத்தப்படுத்தி மற்றும் மணமூட்டி (Amenity Kit) தொகுதிகளை உற்பத்திசெய்து விநியோகிக்கும் பணியை இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பித்த ரணில் டி சில்வா அமாமி வர்த்தகநாமத்தின் (www.hotelsupplies.lk) உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்கத் தொடங்கி மூன்று தசாப்தங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அவருடைய வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை கொண்டாடும் வகையில் அண்மையில் கடவத்தை அமாமி கைத்தொழிற்சாலை வளாகத்தில் வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதையொட்டி மரநடுகை நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 80களில் ஒபரோய் ஹோட்டலுக்கு எயார் பிரெஷ்னர் வாசனைக் கட்டிகளுடன் கூடிய முதலாவது உற்பத்திகளை விற்பனைச் செய்ததன் மூலம் தொடங்கப்பட்ட அமாமி நிறுவனமானது, தற்பொழுது எயார் பிரெஷ்னர், ஷெம்பு, ஷவர் ஜெல், டூத்பேஸ்ட், கிளிசரின் சவர்க்காரக் கட்டிகள், அனைத்து வகை சலவைத் தூள்கள், ஆயுர்வேத மற்றும் இயற்கை மூலிகைச் சார்ந்த உற்பத்திகள் பலவற்றை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது.

மேர்க்கண்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸின் புதிய கிளை வடக்கு மாகாணத்தில்

மேர்க்கண்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் தனது 43ஆவது கிளையை சுன்னாகத்தில் திறந்ததை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. KKS வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தில் அமைந்துள்ள கிளையானது உள்ளூர் சமூகத்திற்கு குத்தகை, தங்கக் கடன்கள் மற்றும் நிலையான வைப்புகள் உட்பட பரந்தளவிலான நிதிச் சேவைகளை வழங்கும்.

ஆரம்ப நிகழ்வில் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெரார்ட் ஒண்டாட்ஜி, நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி தனுஷ்க பொன்சேகா மற்றும் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மேர்க்கண்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்கு குத்தகை, தங்கக் கடன்கள், நிலையான வைப்பு, சேமிப்புக் கணக்குகள் மற்றும் கடன்கள் உட்பட முழு அளவிலான நிதி சேவைகளை வழங்க அர்ப்பணித்துள்ளது. வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளுக்கு உதவ, புதிய கிளையில் அனுபவம் வாய்ந்த நிதி அதிகாரிகள் குழுவை நிறுவனம் கொண்டுள்ளது. நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் அனைத்து நிதித் தேவைகளையும் வசதியான சூழ்நிலையில் வழங்குவதாகும். மேர்க்கண்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் வழங்கும் தனிப்பட்ட சேவை மற்றும் பரந்தளவிலான நிதிச் சேவைகளை அனுபவிக்க KKS வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்திலுள்ள புதிய கிளையை அணுக பொதுமக்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களுக்கான ஸ்மார்ட்போர்ட்களை அறிமுகப்படுத்தியுள்ள சிங்கர் நிறுவனம்

அதிநவீன தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கை மக்களுக்கு வலுவூட்டுவதில் புகழ்பெற்ற ஒரு நிறுவனமான சிங்கர் (ஸ்ரீலங்கா), மாணவர்களுக்கான கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், நிறுவனங்களுக்குள் அலுவலகப் பணிகளை மேம்படுத்துவதற்கும் உதவும் வகையில் புத்தம் புதிய அனைத்து தொழில்நுட்பங்களும் அடங்கிய தட்டை முக (Flat Panel) ஸ்மார்ட்போர்ட்களை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அதிநவீன ஸ்மார்ட்போர்டை கணினி, புரொஜெக்டர் (Projector) அல்லது இலத்திரனியல் வெண்பலகை (Electronic Whiteboard) ஆகப் பயன்படுத்தலாம் என்பதுடன், மேலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்துகிறது.

ஸ்மார்ட்போர்ட் கல்வி மற்றும் அலுவலக நோக்கங்களுக்காக பல்வேறு தெரிவுகளுடன் வருகிறது. விளக்கக்காட்சிகள், ஆவணங்கள், வீடியோக்கள், இசை மற்றும் பலவற்றைக் காண்பிக்கும் திறன் இதில் அடங்கியுள்ளன. அதன் உள்ளக மெமரியை Internal Memory) ஆவணங்கள், பாடத் திட்டங்கள் மற்றும் பலவற்றிற்கான தேக்கமாகப் (Storage) பயன்படுத்தி, கற்பித்தல் மற்றும் அலுவலகப் பணிகளை மிகவும் திறம்படச் செய்யலாம். ஸ்மார்ட்போர்ட்களை இலகுவாக ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டுசெல்லுதல் மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் வகுப்பறை மற்றும் அலுவலக முகாமைத்துவக் கூட்டங்கள் இடம்பெறும் அறை ஆகிய இரண்டிற்கும் சிறந்த சாதனமாக அமைகிறது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட்போர்ட்கள் குறித்து சிங்கர் (ஸ்ரீலங்கா) பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரியான மகேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், உலகின் முன்னணி ஸ்மார்ட்போர்ட் தொழில்நுட்பத்தை மீண்டும் இலங்கைக்கு வழங்க முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த புதிய டிஜிட்டல் யுகத்தில் இலங்கையின் கல்வித் தரம் மற்றும் நிறுவன வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நாம் எமது பங்களிப்பை வழங்குவது மிகவும் அவசியமாகும் என்று குறிப்பிட்டார்.

சிறுவர்களில் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக செலான் வங்கியின் டிக்கிரி அன்பளிப்பு வவுச்சர் திட்டம்

செலான் டிக்கிரி கணக்குதாரர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, தனது செலான் டிக்கிரி அன்பளிப்பு வவுச்சர் விற்பனைப் பங்காளர்களில் மேலும் மூன்று புதிய சேவை வழங்குநர்களை 2023ஆம் ஆண்டுக்காக இணைத்துள்ளது.

சரசவி, CIB சொப்பிங் சென்ரர்கள் மற்றும் DSI Shoes ஆகியன ஏற்கனவே காணப்படும் நான்கு விற்பனை நிலையங்களுடன் இணைந்துள்ளன. இதனூடாக மொத்தமாக ஏழு சேவை வழங்குநர்கள் இந்தத் திட்டத்தில் அங்கம் வகிக்கின்றன. இவற்றினூடாக, செலான் டிக்கிரி கணக்குதாரர்களுக்கு, இலகுவாக பரந்தளவு அன்பளிப்புத் தெரிவுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர், டிக்கிரி கணக்குதாரர்களின் கணக்கு மீதிகளின் பிரகாரம் வங்கியினால் வழங்கப்பட்ட அன்பளிப்புகளிலிருந்து ஒன்றை தெரிவுசெய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், புதிய டிக்கிரி வவுச்சர்கள், செலான் டிக்கிரி கணக்கில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு புதிய வைப்புக்கும் வழங்கப்படுவதுடன், டிக்கிரி சிறுவர்களுக்கு, தமக்கு பிடித்த அன்பளிப்பை தெரிவுசெய்யும் வாய்ப்பையும் வழங்குகின்றது. ஒவ்வொரு ரூ. 1000 முதல் ரூ. 20,00,000 வரையான வைப்புகளுக்கும் வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பிரிவின் உதவிப் பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "எமது செலான் டிக்கிரி கணக்கினூடாக, சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொறுப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் டிக்கிரி அன்பளிப்பு வவுச்சர் திட்டம் ஓர் உதாரணமாகும். சிறுவர்கள் முன்னரைவிட அதிகளவில் தமது எதிர்பார்ப்புகள் மற்றும் அவற்றை வெளிப்படுத்தும் திறன் படைத்தவர்களாக உள்ளதை நாம் இனங்கண்டுள்ளோம். எனவே, வயது மட்டங்களுக்கமைவான நியம அன்பளிப்புகள் காலம் கடந்தவையாக உள்ளன. புத்தகங்கள், காகிதாதிகள், பாதணிகள் மற்றும் பல தேவைகளை நிவர்த்திசெய்துகொள்ள இந்த வவுச்சர்களைப் பயன்படுத்த முடியும். சிறுவர்களுக்கு தமது சேமிப்புக்கான அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும் வகையில் பல தெரிவுகளை செலான் வங்கி வழங்குகின்றது. இந்தப் புதிய சேவை வழங்குநர்களை நாம் இணைத்துக்கொண்டுள்ளதனூடாக, டிக்கிரி சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கமானது மேலும் ஊக்குவிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் நிதியளவில் சுயமாக செயற்படக் கூடிய நிலையும் ஏற்படும்" - என்றார்.

பாம்கெமி மற்றும் பீட்கெமி நிறுவனங்களுக்கு CNCI இரட்டை விருதுகள்

கால்நடை மருந்து மற்றும் கால்நடை உணவுச் சேர்க்கைகள் உற்பத்தித் துறைச் சந்தையின் முதல்வனாக திகழும் வரையறுக்கப்பட்ட பாம்கெமி தனியார் நிறுவனம் தனது மேம்பட்ட தரத்தை மீண்டுமொரு முறை நிரூபிக்கும் வகையில் வெற்றிகரமான ஐந்தாவது தடவையாகவும் இலங்கை தேசிய கைத்தொழில் சபை (CNCI) ஏற்பாடு செய்த 2022ஆம் ஆண்டுக்கான தொழிற்துறை உயர் விருது விழாவில் தேசிய மட்டத்தின் திறமைச் சான்றிதழ் விருதை வென்றுள்ளது.

மேலும், பாம்கெமி நிறுவனத்தின் சகோதர நிறுவனமான பீட்கெமி நிறுவனம் உற்பத்திப் பிரிவின் பாரியளவிலான பிரிவில் தேசிய மட்டத்திலான திறமைச் சான்றிதழ் விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விருது விழாவில் பாம்கெமி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதித்த வணிகசிங்க தமக்கான விருதைப் பெற்றுக்கொண்டார். 20 ஆண்டுகால பெருமைமிகு வரலாற்றைக் கொண்டுள்ள பாம்கெமி நிறுவனம் சர்வதேச சந்தையினையும் வென்றுள்ளது. இந் நிறுவனத்தின் முதன்மை வர்த்தகநாமமான 'பாம்ஸ்டார்' உள்ளிட்ட பல்வேறு வர்த்தகநாமங்களில் கால்நடைச் சுகாதார உற்பத்திகள், கால்நடை மருத்துவ உற்பத்திகள், கால்நடை உணவு சேர்க்கை உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. 2018ஆம் ஆண்டு தொடக்கம் பாம்கெமி உற்பத்திகள் இந்தியா, உகண்டா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் ஐக்கிய அமீரகம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

லங்கா அல்சைமர் பவுண்டேசன் (LAF) நிறுவனத்துடன் கூட்டாண்மையினை ஏற்படுத்தியுள்ள AIA

AIA லங்கா அல்சைமர் மற்றும் வேறு வகையான ஞாபக மறதி நோய்களுக்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் லங்கா அல்சைமர் பவுண்டேசன் நிறுவனத்துடன் கூட்டாண்மையை ஏற்படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் வேகமாக அதிகரிக்கும் வயதானவர்களைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் இடம்பிடிப்பதுடன், 2050ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் ஞாபக மறதியுடன் தொடர்புடைய நோய்களினால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமிருப்பதாக ஆய்வொன்றில் மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு பொறுப்பு வாய்நத் பெறுநிறுவனம் என்ற வகையில் AIA இன்ஷூரன்ஸ் அந்த நோயின் அபாயத்தன்மையை அறிந்து கொண்டுள்ளமையால் இலங்கை மக்கள் அனைவரும் நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியமாக, சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு உதவுவதை நோக்காகக்கொண்டு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

இநத் நோக்கத்திற்காக AIA இன்ஷூரன்ஸ் LAF நிறுவனத்திற்கு தனது நன்கொடையை வழங்கியுள்ளதுடன், அல்சைமர் நோயை ஆரம்பத்தில் கண்டறிதல் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் மற்றும் விழிப்புணர்வையும் அதிகரிக்கும் நோக்கில் தனது முழுமையான ஆதரவையும் LAFஇற்கு வழங்கியிருக்கின்றது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் AIA மேற்கொண்டுள்ள பல பங்களிப்புகளில் இந்த சமூக உதவியும் ஒன்றாக இடம்பிடிக்கும். AIA நிறுவனம் பொதுவாக தேசம், மக்கள் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்காக தனது முயற்சிகளில் மிகவும் உறுதியாகச் செயற்பட்டு வருகின்றது.

LAF இலங்கையில் ஞாபக மறதி மற்றும் குறைபாடு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட மக்களை அடையாளப்படுத்தி அவர்களின் தேவைகளை நிவர்த்திசெய்யும் விதமாக உதவுவதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரேயொரு நிறுவனமாகவே திகழ்கின்றது.

திருகோணமலை பல்கலைக்கழக மாணவர்கள் அடிப்படை வசதிகளைக்கோரி ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை மேலதிக, கந்தளாய் செய்தியாளர்)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் அடிப்படை வசதிகள், விடுதி, விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உரியமுறையில் இல்லை - என எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் வெள்ளிக்கிழமை (24) திருகோணமலை புகையிரத நிலைய சந்தியிலிருந்து ஆரம்பமாகி திருகோணமலை கண்டி வீதி அபயபுர சுற்றுவட்டம் வரை சென்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்தில் அடிப்படை வசதிகள் கூட இல்லாமையினால் மாணவர்கள் பெரிதும் அவஸ்தைப்படுவதாகவும் தமது கற்றல் செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுத்து செல்வதற்கு பெரும் தடையாக இருப்பதாகவும் கூறி குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் ''திருகோணமலை வளாகத்தில் அடிப்படை வசதிகள், விடுதி, விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உரிய முறையில் இல்லை. ஆதலால் கல்வி மற்றும் நலன்புரி உட்கட்டமைப்பை உடனடியாக தீர்க்க ஒரு மருத்துவ மையத்தைப் பெற்றுத்தாருங்கள்'' என்ற கோரிக்கையை முன்வைத்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

மட்டக்களப்பிலுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி இனாமாக வழங்கப்படும்

அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவிப்பு

(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்துவரும் 98 ஆயிரத்து 78 ஏழைக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும், 10 கிலோ அரிசி இருமாதங்களுக்கு இனாமாக வழங்கப்படும். மேலும் எமது விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலையில் நெற்கொள்வனவும்

இடம்பெறும். இச்செயற்பாடுகளில் ஏதேனும் அதிருப்தி தோன்றினால் அதனை தனது கவனத்திற்கு நேரடியாக கொண்டுவரலாமென மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இத்திட்டம் அரசாங்கத்தினது புதிய திட்டம். இத்திட்டத்திற்கான நெல் எமது மாவட்ட விவசாயிகளிடமிருந்து கிலோவொன்றுக்கு 100 ரூபா அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும். இது 12 விகிதத்திற்கு மேல் ஈரப்பதனுடன் 09 விகிதத்திற்கு மேல் பதர் விகிதமும் இல்லாதிருப்பது கட்டாயமானது. நெற் கொள்வனவினால் விவசாயிகள் பெரிதும் நன்மை பெறுவர். நெல்லுக்குரிய பணம் அரச வங்கிகளினால் விவசாயிகளின் கணக்கில் வைப்புச் செய்யப்படும். நெல்லை கொள்வனவு செய்தலும் அதனை அரிசி ஆலைகளுக்கு வழங்கி அரிசியாக்கும் நிர்வாகமும் அல்வப்பகுதி பிரதேச செயலாளர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரிசி ஆலை உரிமையாளர்களது ஒப்புதல் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. அரிசியைப் பெறும் பயனாளிகளில் சமூர்த்தி, முதியோர், சுகமாக்கிக்கொள்ள முடியாத நோயாளிகள் என்போர் அடங்குவர். இதற்கான வேலைத்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அரிசி விநியோகம் ஒரிரு நாட்களில் இடம்பெறும். ஏழைக் குடும்பங்கள் இதனால் பாரிய நன்மையைப் பெறுமென நம்பப்படுகிறதென அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு

சிறந்த தொழில் முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை

(மட்டக்களப்பு)

மகளிர் தினத்தை முன்னிட்டு சிறந்த தொழில் முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனைக்கமைவாக, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தனின் (காணி) வழிகாட்டலின்கீழ் மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அருணாளினி சந்திரசேகரனின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள தேசிய மட்டத்தில் சிறந்த தொழில் முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்கான நிகழ்வுக்காக 14 பிரதேச செயலகங்களிலிருந்து தொழில் முயற்சியாளர்கள் தலா ஒருவர் வீதம் 14 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அதில் மூவர் சிறந்த தொழில் முயற்சியாளராக தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு அதிலிருந்து ஒருவருக்கு மாத்திரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சினால் சிறந்த தொழில் முயற்சியாளர் விருது தேசிய மகளிர் தினத்தன்று வழங்கப்படவுள்ளது. மாவட்ட செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி பிரிவு குழுவினரால் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

கடவுச்சீட்டுகள் பலவற்றை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

கடவுச்சீட்டுகள் பலவற்றை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான அரச பல் நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமாக நபர் ஒருவர் பல கடவுச்சீட்டுகளை நபர்களிடம் பெற்றுவருவதாக பொலிஸ் விசேடப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு வியாழக்கிழமை (23) தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய, சம்பவ இடத்திற்கு கல்முனை தலைமையகப் பொலிஸார் வருகைதந்து சுற்றிவளைத்து தேடுதல் ஒன்றினை மேற்கொண்டனர். இதன்போது மட்டக்களப்பு மாவட்டம், ஆரையம்பதி பகுதியைச் சேர்ந்த 51 வயது மதிக்கத்தக்க மைக்கல் மணிமேகலன் என்பவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு எனக் கூறி சிலரிடம் பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டுகளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் வங்கிக் கணக்கில் ஊடாக பலரிடம் பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. மேலும் சந்தேக நபர் வசமிருந்த கடவுச்சீட்டுகள் மீட்கப்பட்டு உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

இவ்வாறு வரவழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நற்பிட்டிமுனை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், தமது கடவுச்சீட்டுகளை சந்தேகநபரிடம் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பிற்காக வழங்கியதாகவும் அதற்காக சந்தேக நபரின் வங்கிக் கணக்குக்கு பெருந்தொகையான பணத்தை வைப்பிலிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் குழுவினர் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதுடன், கைதான சந்தேகநபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரா அல்லது இடைத்தரகரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கான பீடை முகாமைத்துவப் பயிற்சிநெறி

(கல்முனை செய்தியாளர்)

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட பனிச்சங்கேணி கண்டத்தில் 16 வாரமாக நடைபெற்ற நெற்பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பயிற்சிநெறியின் இறுதி நிகழ்வும், அறுவடை மதிப்பீட்டு விழாவும், சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டீ.எம்.நளீர் தலைமையில் நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர்களின் ஒத்துழைப்புடன் வியாழக்கிழமை (23) நடைபெற்றது.

இதன்போது விவசாயிகளுக்கு இலவசமாக சேதனத் திரவப் பசளைகள், சேதனப்பீடை நாசினிகள், கூட்டெரு போன்றன தயாரிப்பதற்கான மூலப்பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மேலும், சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலையத்தினால் சிறப்பான முறையில் இடம்பெற்று வருகின்ற வழிகாட்டல்களுக்கு விவசாயிகள் இதன்போது நன்றியைத் தெரிவித்தனர். அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வருவதுடன், நாட்டின் நெற் பயிர்ச்செய்கையில் அம்பாறை மாவட்டத்தில் அதிகளவில் நெற்பயிர்செய்கை மேற்கொள்ளும் பிரதான இடமாக சம்மாந்துறை பிரதேசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

போடியார் புலம்பல்!

ரணிலுக்கு பைத்தியம் புடிச்சிக்காம் எண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சொன்னவர் எலுவா? அடே அந்த பைத்தியகாரணத்தானேடா தன்னம் தனிய தேசிய பட்டியல் எம். பியாக்கி 137, பைத்தியகார எம்.பிமார் ஜனாதிபதியாக தூக்கி வச்சி இருக்காங்க ஒட்டுமொத்தமா பார்த்தா இப்ப பாராளுமன்றமே பைத்தியகார ஆஸ்பத்திரி மாதிரித்தான் இருக்கு. இதற்கு வைத்தியர்களாகத்தான் இப்ப எடுத்ததுக் கெல்லாம் நீதிமன்றம் செயல்படுது மெய் எலுவா?

கல்முனை நூலகத்திற்கு மன்சூரின் பெயரை சூட்டுவதற்கான பிரேரணை நிறைவேற்றம்

(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை சூட்டுவதற்காக கல்முனை மாநகர சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் விசேட பொதுச் சபை அமர்வு வியாழக்கிழமை (23) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோது இப்பிரேரணை தொடர்பில் உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களைத் தொடர்ந்து முதல்வரினால் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது பிரேரணைக்கு ஆதரவாக 23 உறுப்பினர்களும் எதிராக 12 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர். 05 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை. ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, சாய்ந்தமருது தோடம்பழ சுயேச்சைக்குழு மற்றும் வெல்கொம்பர் சுயேச்சைக்குழு உறுப்பினர்களுமாக 23 முஸ்லிம் உறுப்பினர்களே ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மான் சுயேச்சைக் குழு உறுப்பினர்களுமாக 12 தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்திருந்தனர்.

அரசின் கட்டுப்பாட்டு விலையில் நெல் கொள்வனவு

(பெரியநீலாவணை செய்தியாளர்)

விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நெல் கொள்வனவுசெய்யும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசத்தில் விவசாயிகளிடமிருந்து கட்டுப்பாட்டு விலையில் நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் எஸ். ரங்கராஜன் தலைமையில் வியாழக்கிழமை (23) நடைபெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல் ஈரப்பதன் 14 வீதத்திற்கும் குறைவாக இருந்தால் 100 ரூபாவுக்கும், ஈரப்பதன் 14 வீதத்துக்கும் மேல் இருந்தால் 88.60 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு, நாவிதன்வெளி செய்தியாளர்கள்)

கல்முனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரிசி ஆலைகளில் நெல் கொள்வன வுகளை மேற்கொள்ளும் செயற்திட்டம் வெள்ளிக்கிழமை (24) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பெரியநீலாவணையில் இடம்பெற்றது.

2022/2023ஆம் ஆண்டுக்கான பெரும் போகத்தில் நெல் அறுவடைக்கான நியாய மான விலையை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல், மிகை அறுவடையை அரசாங்கம் கொள்முதல் செய்தல், இக்கட்டான பொருளாதார நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு நெல் கொள்வனவுசெய்யும் வேலைத்திட்டம் அரசின் தீர்மானத்திற்கமைய நாடுபூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவியின் நிர்வாணப் படங்களை சமூக ஊடகங்களில் பரப்பிய இளைஞனுக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவியின் நிர்வாணப் படங்களை சமூக ஊடகங்களில் பரப்பிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான காதலர் என கூறப்படும் சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவிற்கு புதன்கிழமையன்று (22) நற்பிட்டிமுனை பகுதியைச் சேர்ந்த தனது மகளின் அந்தரங்கப் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து முறைப்பாடொன்றை கல்முனை மாநகர சபை பெண் உறுப்பினர் வழங்கியிருந்தார்.

இதற்கமைய செயற்பட்ட பொலிஸார் குறித்த பாடசாலை மாணவிய காதலிப்பதாக சந்தேகிக்கப்பட்ட திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை மாணவியின் ஒத்துழைப்புடன் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து விசாரணையின் பின்னர் கைதுசெய்தனர்.

இதன்போது 2 வருடங்களாக காதலிப்பதாக ஏமாற்றி அவ்வினளுன் அக்காலகட்டத்தில் பாண்டிருப்பு பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்துகுறித்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதுடன், அதனை காணொளியாக தனது கைதொலைபேசியில் சேமித்து வைத்துள்ளார்.

பின்னர், 2 வருடங்களாக தொடர்ந்த காதல் இடைநடுவில் மாணவியின் பெற்றோர் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது. இதனால் குறித்த இளைஞன் விரக்தியுற்று மாணவியின் பெற்றோருக்கு பல்வேறு அழுத்தங்களை தொலைபேசி ஊடாக வழங்கி வந்துள்ளார். இந்நிலையில், திடீரென சமூக வலைத்தளங்களில் அம்மாணவியுடன் காதல் தொடர்பில் இருந்த காலங்களில் எடுக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகக் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, அம்மாணவியின் தாயார் கல்முனை தலைமையகப் பொலிஸ்நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய செயற்பட்ட பொலிஸார் குறித்த இளைஞனை கைதுசெய்து வியாழக்கிழமை (23) கல்முனை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

5 பேர் உயிரிழப்பு; 15பேர் படுகாயம்

பாகிஸ்தானில் மக்கள் அதிகம் கூடியிருந்த சந்தைப் பகுதியில் குண்டொன்று வெடித்து சிதறியதில் 5 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 16 பேர் படுகாயமடைந்தனர்.

பலுச்சிஸ்தான் மாகாணத்திலுள்ள அந்த சந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனம் ஒன்றிலிருந்து குண்டு வெடித்துள்ளது.

ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கப்பட்டு குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தைச் சுற்றிலும் ஏராளமான கடைகளும் சேதமடைந்துள்ளன.

கடந்த மாத இறுதியில் பாகிஸ்தானின் பெஷாவர் நகரிலுள்ள பள்ளிவாசலொன்றில் குண்டு வெடித்ததில் 32 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

துருக்கி - சிரியாவை மீண்டும் உலுக்கிய 5.3 ரிச்டர் நிலநடுக்கம்

இருநாடுகளிலும் இதுவரை 50ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

துருக்கி மற்றும் சிரியாவில் 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50ஆயிரத்தை கடந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் (25) 5.3ரிச்டர் அளவில் மீண்டுமொரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6ஆம் திகதி 7.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் இதுவரை இருநாடுகளிலும் 50ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் துருக்கியில் 5,20,000 அடுக்குமாடி குடியிருப்புகளில் 1,60,000இற்கும் மேற்பட்ட கட்டடங்களும், சிரியாவிலும் பல்லாயிரக்கணக்கான கட்டடங்களும் நிர்மூலமாகின.

நிலநடுக்கத்தால் துருக்கியில் 44,218 இற்கும் மேற்பட்டோரும் சிரியாவில் 5,914இற்கும் மேற்பட்டோரும் உயிரிழந்துள்ளனர். அவசரகால மீட்புப் பணிகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ள நிலையில், இடிபாடுகளை அகற்றும் பணிகளும், புதிய மறுவாழ்வுக்கான கட்டுமானப் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 5.3 ரிச்டர் அளவில் மீண்டுமொரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

6.5 ரிச்டரில் அதிர்ந்த பப்புவா நியூ கினியா

பப்புவா நியூ கினியாவில் நியூ பிரிட்டன் தீவுக்கூட்டம் உள்ளது. நியூ பிரிட்டன் நகரிலிருந்து 38 கி.மீ. தொலைவில் நேற்று அதிகாலை 6.5 ரிச்டர் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை.

குலுங்கிய ஆப்கான்

இதேவேளை,

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலையில் திடீரென 4.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதேபோன்று ஜப்பானின் ஹோக்கைடோ தீவில் நேற்றுமுன்தினம் மாலை 6.1 ரிச்டர் அளவில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர் தோச்சியாக உலகில் பல்வேறு நாடுகளில் நிலநடுக்கங்கள் பதிவாகி வருவதால் அனைத்துலக நாடுகளையும் கலக்கமடையச் செய்துள்ளது.

வடகொரியாவில் கடும் உணவுத் தட்டுப்பாடு

கொரோனா பேரலைக்குப் பின்னர் வடகொரியாவில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளபோதும் இன்னும் பஞ்சம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

பலர் பட்டினியால் சாகும்நிலை குறித்த அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரிய தலைவர்கள் அவசரப் பிரச்சினையாக சரியான வேளாண் கொள்கையை அமைப்பது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

உணவுத் தட்டுப்பாட்டைக் கையாளத் தவறினால், ஜனாதிபதி கிம் ஜோங் உன் அணு ஆயுதத்திட்டங்களுக்கு மக்கள் ஆதரவை இழக்க நேரிடும் என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எல்-சால்வடோரில் கை-கால்கள் கட்டப்பட்டு ஒரே நேரத்தில் 2000 கைதிகள் சிறை மாற்றம்

மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடோரில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் பிரமாண்ட சிறைக்கு ஒரே நேரத்தில் சுமார் 2 ஆயிரம் கைதிகள், கை-கால்கள் கட்டப்பட்ட நிலையில் அழைத்துச் சென்று அடைக்கப்பட்டுள்ளனர்.

உலகில் அதிக குற்றங்கள் நடைபெறும் நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் எல் சால்வடோரில் ஏராளமான குண்டர் குழுக்கள் கொலை, கொள்ளை உள்ளிட்ட சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரே நாளில் 62 பேர் கொலை செய்யப்பட்டமை உலகையே உலுக்கியது. அந்நாட்டு ஜனாதிபதி நயீப் புகெலேவின் அதிரடி நடவடிக்கையால் அண்மையில் சுமார் 63 ஆயிரம் குண்டர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, கடுங்குற்றவாளிகளை சிறையில் அடைப்பதற்காக புதிதாக பயங்கரவாத தடுப்பு மையம் என்ற மெகா சிறை சமீபத்தில் டெகோலுகா என்ற இடத்தில் திறக்கப்பட்டது. இந்த சிறையில் 4,000இற்கும் மேற்பட்ட கைதிகளை அடைத்து வைத்திருக்க முடியும்.

இந்நிலையில் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அவர்களில் சுமார் 2 ஆயிரம் பேர் தலைமுடி மழிக்கப்பட்டு, கை,கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு ஒரே நேரத்தில் அங்கு புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் பிரமாண்ட சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதுகுறித்து அந்நாட்டு ஜனாதிபதி நயீப் புகெலே வெளியிட்ட அறிவிப்பில்,

'சமீபத்தில் திறக்கப்பட்ட 'மெகா சிறைக்கு' கடுங்குற்றவாளிகள் 2,000 பேர் மாற்றப்பட்டனர்.

இது தான் அவர்களின் புதிய வீடு; அங்கு அவர்கள் ஒரே இடத்தில் அடைபட்டு கிடப்பார்கள். இவர்கள் அனைவரும் மக்களுக்கு பெரும் துன்பங்களை கொடுத்தவர்கள் ஆவர்" என்று ஸ்பானிஷ் மொழியில் தெரிவித்துள்ளார்.

தற்போது புதிய சிறைக்கு மாற்றப்பட்ட அனைவரும் போதைப்பொருள் மாஃபியா கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றும், உலகிலேயே மிகப்பெரிய மற்றும் 410 ஏக்கரில் கட்டப்பட்ட மிகப்பெரிய சிறைச்சாலை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டு கழகத்தின் மெக்ஸ் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடருக்கான சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது. இராசமாணிக்கம் மக்கள் அமைப்பினூடாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சீருடைகளுக்கான நிதி உதவியினை வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் கழக உறுப்பினர்கள், அனுசரணையாளர்கள் கலந்து கொண்டனர்.

(படம் - நித்தவூர் நிருபர்)

வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை

களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் பேருவளை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து ஒருநாள் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மக்கொன சரே கடினப்பந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதான அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆபிப்புல் இஸ்லாம் கலந்துகொண்டார். மேலும் களுத்துறை மாவட்ட பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் துமிந்த ராஜபக்ஷ நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பண்டாரநாயக்க மகா வித்தியாலயம் 38 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 156 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை, அதை எதிர்த்து களமிறங்கிய அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை 31 ஓவரில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 157 ஓட்டங்களை பெற்று Victory Cup - 2022 வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஆர்.எம் ரிஸ்கி, பண்டார நாயக்க மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி கே.பி. தயாணி தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர். மேலும், இந்த செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதிபமைச்சர் அஹ்மத் ஸாதிக் செயற்பட்டிருந்தார். இந்த செயற்திட்டம் மென்மேலும் வெற்றியடைவதற்கு பாடசாலைகளினுடைய பழைய மாணவர் அமைப்பு, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்புக்குழு, நலன்விரும்பிகள் மற்றும் அனுசரணை நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளோடு களுத்துறை மாவட்டத்தில் கடினப்பந்து விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

themilansports@gmail.com

மகனின் அதிரடியால் வீழ்ந்த தந்தையின் அணி

2023ஆம் ஆண்டுக்கான பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் கடந்த வராம் முதல் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், கடந்த சனிக்கிழமை சர்பராஸ் அகமது தலைமையிலான குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணி வதார் கான் தலைமையிலான இஸ்லாமாபாத் யுனைடெட் அணியை எதிர்கொண்டது.

குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணிக்கு முன்னாள் பாகிஸ்தான் வீரர் மொயின் கான் பயிற்சியாளராக உள்ளார். இவரின் மகன் அசம் கான் இஸ்லாமாபாத் யுனைடெட் அணியில் இடம்பெற்றுள்ளார். தந்தையை போலவே அசம் காலும் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன்தான். குறித்த ஆட்டத்தில் அசம் கான் அபாரமாக விளையாடி தந்தையின் அணியை தோற்கடித்தார்.

முதலில் பேட் செய்த இஸ்லாமாபாத் யுனைடெட் அணியில் அசம் கான் 42 பந்துகளில் அதிரடியாக 97 ரன்கள் குவித்தார். முன்னதாக, அரை சதம் கடந்ததும் தனது தந்தை மொயின் கானை நோக்கி சைகை செய்து, உங்களுக்காக இந்த அரைசதம் என்பதுபோல் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பதிலுக்கு மொயின் கான் கைதட்டி மகனை உற்சாகப்படுத்தினார்.

குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணி 19.1 ஓவர்களில் 157 ரன்களுக்கு சுருண்டு தோல்விகண்டது. இதில் மகன் அடித்த சதம் காரணமாக தந்தையின் அணி வீழ்ந்தது என்பதே கதை.

நுவரெலியா மாநகரசபை பிரிவுகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி

(செ.திவாகரன்)

நுவரெலியா மாநகர சபை பிரிவுகளுக்கு இடையில் நல்லினக்கத்தை வளர்ப்பதற்காக கடந்த வாரம் நுவரெலியா மாநகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் முதலாம் இடத்தை மாநகர சபை தீர் பிரிவும், இரண்டாம் இடத்தை மாநகர செயலாளர் பிரிவும் பெற்றனர். இதில் நுவரெலியா மாநகர சபையின் அனைத்து ஊழியர்களும், உத்தியோகத்தர்களும், மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7